வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 22.12.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 356 | பக்கங்கள் : 16

# அநுரவின் இந்தியப் பயணம் அந்நாட்டுக்கு பெரும் திருப்தி!

## கொழும்பு ஊடகம் தகவல்

கொழும்பு, டிசெம்பர் 22

**ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் இந்தியப் பயணம் வெற்றி பெற்றுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பாக நேற்று வெளியான அந்தச் செய்தியில்-

இந்தியாவுக்கு பயணம் செய்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு மிக உயர்ந்த அங்கீகாரம் கிடைத்தது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அநுரகுமாரவை அன்புடன் வரவேற்று, அநுரவின் முதுகில் கைவைத்து பிரதமர் மாளிகைக்கு அழைத்துச் சென்றார். ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கையில் இருந்து சென்ற எந்தவொரு ஜனாதிபதிக்கும் இராணுவ மரியாதை வழங்கப்படவில்லை. ஆனால், ஜனாதிபதி அநுரகுமார இந்திய உயர்மட்டத்தில் இருந்து அதே மரியாதைகளைப் பெற்றார்.

மோடியுடனான பேச்சுவார்த்தைக்கு பின் இரு நாட்டு தலைவர்களும் கூட்டாக அறிக்கை வெளியிட்டனர். இந்திய குடியரசு தலைவர் திரௌபதி 15



# பிரதமர் ஹரிணியுடன் செல்வம் எம்.பி. பேச்சு

## காணிப்பிரச்னைகள் ஆராய்வு

கொழும்பு, டிசெ. 22

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனுக்கும், பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையில் நேற்று சந்திப்பு இடம்பெற்றுள்ளது. 15

மாகாண சபைத் தேர்தல் முறைமை;

# சட்ட சிக்கலுக்கு தீர்வு காணும் பொறுப்பு அரசுக்கே உள்ளது!

## கூறுகிறது தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, டிசெ. 22

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் பாராளுமன்றத்தின் ஊடாக உறுதியான தீர்மானத்தை எடுக்கவேண்டும். சுட்டிக்காட்டப்பட்டுள்ள சட்ட சிக்கலுக்கு தீர்வு பெற்றுக் கொடுத்தால் மாகாண சபைத் தேர்தலை தாராளமாக நடத்தலாம். கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் 15

# அநுரவை கொலை செய்ய முயற்சி; சி.ஐ.டியின் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 22

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல் நாள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை படுகொலை செய்ய முயற்சித்தமை தொடர்பிலான குற்றச்சாட்டொன்று தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கண்டியில் உள்ள முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அந்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். (அ)

# மாவீரர் துயிலும் இல்லங்களில் அரசியலுக்கு இனி இடமில்லை

## மாவீரர்,போராளி குடும்ப நலன் காப்பகம்

கிளிநொச்சி, டிசெ. 22

மாவீரர் துயிலும் இல்லங்களில் அரசியல் தலையீடுகளுக்கு இடமளிக்கப் போவதில்லை என மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகத்தின் ஏற்பாட்டுக் குழு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

நேற்று மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு இணைந்த கலந்துரையாடல் நிகழ்வொன்று நடைபெற்றது. 15



# கொழும்பு வந்தது சீன கப்பல்

கொழும்பு, டிசெ. 22

சீனக் கடற்படையின் மருத்துவமனைக் கப்பலான ஆர்க் பீஸ் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த கப்பல் இலங்கை மக்களுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை சேவைகளை எதிர்வரும் 27 வரை வழங்குவதற்காக வருகை தந்துள்ளது.

இந்த மருத்துவ முகாம் செயற்பாட்டின் மூலம் சீன - இலங்கை இடையேயான நட்புறவை கட்டியெழுப்புவதும் ஒரு நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்குகின்றது அரசு

## நோர்வேயிடம் தமிழரசு சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 22

பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குதல், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துதல் என்பவற்றுக்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுப்பதில் அரசாங்கம் பின்வாங்குவது போல் தென்படுவதாக இலங்கை தமிழ் அரசு கட்சி உறுப்பினர்கள் நோர்வே 15

# சமஷ்டி கோரி கஜேந்திரகுமார் இனவாதத்தை தூண்ட முயற்சி

## சீலரத்ன தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 22

“சமஷ்டி தீர்வைக் கோரி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இனவாதத்தை தூண்ட முற்படுகின்றார். அவர் இவ்வாறு செயற்பட்டால் நாம் சும்மா இருக்கமாட்டோம். பிறகு கஜேந்திரகுமாருக்கு எங்கு செல்ல வேண்டிவரும் என தெரியாது” என்று ஜனசத பெரமுன கட்சி யின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார். 15

# விமானத்தில் அநுரவின் செயல்பாடு: பாராட்டிய ரணில் ஆதரவு ஊடகம்!

கொழும்பு, டிசெ. 22

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி அனுரகுமாரவின் செயலை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உறவினரின் ஊடகம் ஒன்று வியந்து பாராட்டி கட்டுரை எழுதியுள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளியான அந்த அரசி யல் பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 15

# தேசிய மக்கள் சக்தி அரசில் விரைவில் முஸ்லிம் அமைச்சர்?

கொழும்பு, டிசெ. 22

தேசிய மக்கள் சக்தியின் அரசில் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போதைய அரசாங்கத்தில் முஸ்லிம் 15

# இந்திய மீனவர்கள் பிரச்னையில் மனிதாபிமானம் இருக்கக்கூடாது!

## வடக்கு மாகாண கடலோடிகள் சங்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 22

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய மீன் பிடியில் ஈடுபடும் மீனவர்கள் விவகாரத்தில் மனிதாபிமானம் என்ற பேச்சே இருக்கக் கூடாது என வடக்கு மாகாண கடலோடிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளரும், இணைப்பாளருமான காத்தலிங்கம் அண்ணாமலை தெரிவித்தார்.

அண்மையில் இந்தியாவுக்கு சென்ற எமது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இந்தியாவில் 15

# இறக்குமதி செய்யும் பஸ்களுக்கு வரிச் சலுகை வழங்கவேண்டும்!

## அரசிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 22

54 ஆசனங்களைக் கொண்ட பஸ் ஒன்றை இறக்குமதி செய்வதற்கு ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவிட வேண்டியுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் எத்தனை மோசடி வெளிவருமோ தெரியாது?

## முன்னாள் எம். பி. திலீபன் சொல்கிறார்

வவுனியா, டிசெ.22

எனது பெயரைப் பயன் படுத்தி ஆயிரக்கணக்கானோர் மோசடி செய்துள்ளனர். தற் போது ஒரு வழக்கு வந்துள்ளது. இன்னும் எத்தனை வருகிறதோ தெரியாது - இவ்வாறு வன்னி மாவட்ட முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் கு. திலீபன் தெரிவித்துள்ளார்.

எனது பெயரை பயன் படுத்தி எனது அலுவலகத்தில் இருந்தவர் செய்த மோசடிக்காக நான் நீதிமன்றம் செல்ல வேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

வவுனியாவில் உள்ள அவ ரது அலுவலகத்தில் நடை பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

"நான் பணமோசடி செய்த தாகவும், கைது செய்யப்பட்ட தாகவும் பல சமூக ஊடகங்களி லும், ஊடகங்களிலும் செய்தி கள் வெளியாகியுள்ளன.

நான் அபிவிருத்திக் குழுத் தலைவராக இருந்த போது எனது அலுவலகத்துக்கு பலர், பல தேவைகள் கருதி வருவது வழமை.

இதன்போது, சில அரச அதி காரிகளுக்கு அதனை சிபார்சு செய்து அனுப்புவது வழமை. ஆனால், முகவர்களாக சிலர் செயல்பட்டு எனது பெயரைப் பயன்படுத்தி பணம் பெற்றுள் ளனர்.

அவ்வாறானதொரு சம்ப வமே நடந்தது. எனது அலு வலகத்தில் இச் சம்பவம் இடம் பெற்றதால் நான் அதற்கு பொறுப்பு சொல்ல வேண்டி யிருந்தது. இதனால், நீதிமன்றம் சென்று எனது தரப்பு நியாயங் களை நான் முன்வைத்துள் ளேன்.

அந்தப் பணம் எனது வங்கி இலக்கத்துக்கு வரவுமில்லை, நான் கை நீட்டி வாங்கவும் இல்லை.

அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் இதனை வைத்து பல கட்டுக்கதைகளை கட்டுகின்றனர்.

நான் பாராளுமன்ற உறுப்பி னராக இருந்த போது காணி மாபியா வேலை செய்ய வில்லை. மாறாக அரச காணி களை மக்களுக்கு வழங்கியுள் ளேன்.

காணி மாபியாக்களுக்கு எதிராக நானும் வழக்குத் தாக் கல் செய்யவுள்ளேன்.

அரச காணிகளை பிடித்து திருட்டுத்தனமாக உறுதிகளை எழுதி வைத்திருந்தனர். நான் அதனை மீட்டு மக்களுக்கு வழங்கினேன்.

அதனால் பாதிக்கப்பட்ட பலர் குழுவாக எனக்கு எதிராக சதி செய்து வருகிறார்கள். நான் சொத்து சேர்ந்துள்ளதாகவும் பல கதைகளை சொல்கிறார்கள். அவை அனைத்தும் பொய்.

முகநூலில் வீரம் பேசுபவர் களுக்கு எதிராகவும் நிகழ்நிலை சட்டத்தை மையமாக கொண்டு வழக்குத் தாக்கல் செய்யவுள் ளேன்.

நான் மோசடி செய்திருந் தால் அல்லது சொத்து குவித்தி ருந்தால் நிரூபிக்க வேண்டும். நிரூபித்தால் நான் அரசியலில் இருந்து ஒதுங்குவேன்.

எனக்கு விழுந்தது 3000 வாக்குகள் தான். ஆனால், எனது பெயரைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கானோர் மோசடி செய்துள்ளனர். தற்போது ஒரு வழக்கு வந்துள்ளது. இனி எத்தனை வருகிறதோ தெரி யாது. அதனை நீதிமன்றம் ஊடாக அணுகத் தயாராகவே உள்ளேன்" - என்றார். (எ)



# இந்தியாவில் சிறைபிடிக்கப்பட்ட மூன்று மீனவர்கள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், டிசெ.22

அனலைதீவிலிருந்து மீன் பிடிக்க சென்று இயந்திர கோளாறு காரணமாக இந்தி யாவில் சிறைபிடிக்கப்பட்ட மூன்று மீனவர்கள் யாழ்ப்பா ணத்தை வந்தடைந்தனர்.

இவர்களில் இரு மீனவர்கள் யாழ்ப்பாணம் அனலைதீவைச் சேர்ந்தவர்களும் ஒருவர் மட் டக்களப்பு வந்தாறுமூலையைச் சேர்ந்தவராக உள்ளார்.

இவர்கள் கடந்த 07 மாதங் களுக்கு முன்னர் அனலைதீவில் இருந்து சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை இயந்திர கோளாறு காரணமாக இந்தி யாவின் கரையோரத்தை சென்ற டைந்தனர். இதன் பின்னர் இவர்களை சிறைபிடித்த இந் திய கடற்படையினர் சிறிது காலம் சென்னை புழல் சிறை யிலும் அதற்கு பின்பு திருச்சி இடைத்தங்கல் முகாமிலும் தங்க வைத்திருந்தனர்.

புதிய அரசாங்கம் பதவி யேற்றதற்கு பின்னர் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுட னான உரையாடலிலும் புதிய கடற்றொழில் அமைச்சரின் முயற்சியாலும் குறித்த மூன்று மீனவர்களும் விடுக்கப்பட்ட னர்.

யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் இளங்குமரன் குறித்த மீனவர்களை பலாலி விமான நிலையத்தில் வர வேற்றார். அப்போது, குறித்த மீனவர்களின் குடும்பத்தினரும் தேசிய மக்கள் சக்தி கட்சி யினரும் பிரசன்னமாகியிருந் தனர். (எ)

# கடன் தரவரிசையில் இலங்கை முன்னேற்றம்

கொழும்பு, டிசெ.22

இலங்கையின் கடன் தரப் படுத்தல் சாதகமான போக்கு காணப்படுவதாக பிட்ச் ரேட் டிங் நிறுவனம் தெரிவித்துள் ளது.

இதன் காரணமாக குறித்த நிறுவனம் இலங்கையின் கடன் மதிப்பீடுகளை மேம்படுத்துவ தாக அறிவித்துள்ளது.

இதன்படி, நீண்டகால வெளிநாட்டு கடன் வழங்குநர்க ளுக்கான மதிப்பீடு சி.சி.சி. எதிர்மறையில் இருந்து சி.சி.சி. நேர்மறையாக மேம்படுத்தப் பட்டுள்ளது. (எ)

# சிறுவர் சட்டங்கள் தொடர்பில் யாழில் விழிப்புணர்வு பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.22

சிறுவர் சட்டங்கள் தொடர் பான விழிப்புணர்வு பயிற்சி பட்டறை சுழிபுரம் மேற்கு கலைமகள் கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

சங்கானை பிரதேச செயல கம், வேல்ட் விஷன் நிறுவனம் மற்றும் சுழிபுரம் மேற்கு கலை மகள் இலவசக் கல்வி நிலையம் என்பன இணைந்து முன்னெ டுத்த பயிற்சி பட்டறையை, சங்கானை சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரவிராஜ் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத் தார்.

இதன்போது,18 வயதுக்குட் பட்ட சிறுவர்களுக்கான உரி மைகள், சிறுவர் சார்ந்த சட் டங்கள் தொடர்பில் சட்டத் தரணி சாருஜாவின் வழிகாட்ட லில் சட்டத்தரணிகளான தர் ஷிகா மற்றும் கஸ்தூரியால் விளக்கமளிக்கப்பட்டன.(எ)

# ஜனாதிபதி செயலணிகளில் சிறுபான்மையினர் அவசியம்

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ.22

'கிளீன் சிறிலங்கா' வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத் துவதற்காக ஜனாதிபதி செய லணி உருவாக்கப்பட்டுள்ள மையை வரவேற்றுள்ள முன் னாள் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, இவ்வாறான செயலணிகளில் இலங்கையின் பல்லினத் தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியில், சிறு பான்மையின மக்களின் பிரதி நிதித்துவம் இல்லாமையை சுட்டிக்காட்டி, ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

ஜனாதிபதியால் அமைக்கப் பட்டுள்ள 18 பேர் அடங்கிய இக்குழுவில் சிறுபான்மை இன மக்களை பிரதிநிதித்துவப்படுத் தும் வகையில் யாரும் உள்ள டக்கப்படவில்லை. (எ- 05)

# வவுனியாவில் விவசாயிகளுக்கு எம்.ஓ.பி. பசளை வழங்கிவைப்பு



வவுனியா, டிசெ.22

வவுனியா கோவில்குளம் கமநல சேவை பகுதிக்குட்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் எம். ஓ. பி. பசளை விநியோக நடவடிக்கை நடை பெற்றது.

குறித்த உர விநியோகம் கோவில்குளம் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோ கத்தர் காஞ்சனா தலைமையில் நடைபெற்றது.

6207 ஏக்கர் பெரும்போக நெற் பயிர்ச் செய்கைக்காக 3722 விவசாயிகளுக்கு இவ் வாறு உரம் வழங்கப்பட்டது.

குறித்த உரமானது நீர்ப்பாச னத்துக்கு ஓர் ஏக்கருக்கு 12 கிலோவும் மானாவாரிக்கு ஒரு ஏக்கருக்கு 10 கிலோவும் வழங்கி வைக்கப்பட்டன. (எ-10)

# "இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவியுங்கள்"

யாழ்ப்பாணம், டிசெ.22

வடக்கில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சந்திப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

பார்ல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் காணி உரிமைகளுக்கான மக்கள் கூட்டணியின் வட பிராந்திய சந்திப்பு நேற்றையதினம் காலை யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக் கப்பட்டது.

குறித்த நிறுவனத்தின் இயக்குநர் சதுண் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஒருங்கிணைப்பாளராக பிரியங்கரவும் கலந்து கொண்டார்.

இதன்போது, வடக்கு மாகாணத்தை சேர்ந்த மக்களின் காணிப் பிரச்னைகள் தொடர்பில்



ஆராயப்பட்டதோடு, வடக்கிலுள்ள 5 மாவட்டங் களை சேர்ந்த மக்களை உள்ளடக்கியதாக 6 பேர் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஆறு பேரும் எதிர்வரும் காலங்களில் தேசிய மட்டத்தில் இடம்பெறும் உயர்மட்ட கலந்துரையாடல்களில் பங்குபற்றி அறிக்கைகளை சமர்ப்பிப்பார்கள்.

அந்தவகையில் யாழ். மாவட்டத்திலிருந்து முரளிதரன் மற்றும் சாருஜனும் முல்லைத் தீவிலிருந்து கலைச்செல்வன், டயாணியும் மன்னாரிலிருந்து ரகீமும் கிளிநொச்சியிலிருந்து அச்சுதனும் வடமாகாண பிரதிநிதியாக முரளிதரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

குறித்த சந்திப்பில் பங்கேற்ற பொது அமைப் புகளின் பிரதிநிதிகளால், "வடக்கில் இராணுவத் தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை மீண்டும் உரியவர்களிடம் ஒப்ப டைக்க உதவுமாறும், வடக்கிலுள்ள சட்டவிரோத பௌத்த விகாரைகளை அகற்றுமாறும், தொல் பொருள் திணைக்களத்தால் சுவீகரிக் கப்பட்டுள்ள மக்களின் பூர்வீக நிலங்களை விடுவிக்குமாறும், அபிவி ருத்தி எனும் பெயரில் மக்களின் காணி களை சுவீகரிப்பதை நிறுத்துதல் போன்ற கோரிக் கைகளை பார்ல் நிறுவன அதிகாரிகளிடம் முன்வைத்தனர்.

இதில், வடக்கு மாகாணத்தை சேர்ந்த பொது அமைப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய அரசில் எந்த விடயமும் முன்னெடுக்கப்படவில்லை

## முன்னாள் எம். பி. சிவாஜிலிங்கம் சாடல்

யாழ்ப்பாணம், டிசெ.22

**புதிய அரசாங்கம் தனது ஆட்சியிலே இடம்பெறும் என்று குறிப்பிட்ட எந்த விடயங்களும் தற்போது முன்னெடுக்கப்படவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**



13ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் தமிழ் மக்களுக்கான பிரச்னைகளை தீர்ப்பதற்கு இந்தியா செயல்பட்டு வருகின்ற போதிலும் அரசாங்கம் அதில் பெருமளவு கரிசனை காட்டவில்லை என்றும் சிவாஜிலிங்கம் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி இந்தியா சென்று இந்தியப் பிரதமருடன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அனைத்து தமிழ் தரப்பினுடைய கோரிக்கையாக இருந்து வருவது சமஷ்டி கோரிக்கையாகும். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமை அரசமைப்பில் இருந்தும் கூட அவை அமுல்படுத்தப்படவில்லை.

தற்போது இந்தியாவை சந்தித்த ஜனாதிபதி கூட அரசியல் உரிமை தொடரில் எந்த விதமான திட்டவட்டமான உறுதிமொழிகளையும் வழங்கவில்லை. அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்திருக்கிறார்.

புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என்று தெரிவித்திருக்கிறார். அரசமைப்பு என்பது பழைய மொந்தையிலேயே புதிய கள்ளு போன்று இருக்குமே தவிர எந்தவித தீர்வும் கொண்டதாக இருக்கப் போவதில்லை.

மிகப்பெரும் வெற்றி பெற்றும் கூட அவர்களது சிந்தனையில் பாரிய மாற்றம் இல்லை.

அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமை வலுப்படுத்த வேண்டும். பல உயிர்த் தியாகங்களை செய்த பின்பும் நாம் பிரிந்து செயல்பட முடியாது. எனவே, அனைவரையும் ஒன்று படுமாறு அழைப்பு விடுவதாகவும் கூறினார்.(எ)

# ஐ. நா. வெளியேறிய பின்னர் எம்மால் வாழமுடியவில்லை

## ரோஹிங்கியா அகதிகள் தெரிவிப்பு பசியால் ஐவர் உயிரிழந்ததாக தகவல்

திருகோணமலை, டிசெ.22

மியன்மார் நாட்டில் 12 வருடகாலமாக தாம் புனர்வாழ்வு முகாம்களில் வசித்து வந்ததாகவும் தம்மை ஐ. நா. பராமரித்து வந்த நிலையில் அவர்கள் கடந்த 18 மாதங்களுக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறியதாகவும் இதனால் வாழமுடியாத சூழ்நிலையில் இலங்கைக்கு வர முடிவெடுத்ததாகவும் ரோஹிங்கியா அகதிகள் கூறினர்.

இலங்கைக்கு வருகை தரும் நோக்கில் மூன்று படகுகளில் 120 பேர் புறப்பட்டதாகவும் இடைநடுவே இரண்டு படகுகள் பழுதடைந்ததாகவும் இதனால் ஒரு படகில் மற்றைய படகில் வந்த நபர்களும் சேர்ந்து பயணித்ததாகவும் கூறினர்.

அத்துடன் வரும் வழியில் இரண்டு குடும்பங்களை சேர்ந்த ஐந்து பேர் பசியால் உயிரிழந்ததாகவும் அவர்களின் உடல்களை கடலில் வீசிவிட்டு வந்ததாகவும் அந்து குடும்பத் தில் ஒரு சிறுமி உயிர் தப்பி தம்முடன் இருப்பதாகவும் கூறினர்.

இலங்கைக்கு வருவதற்காக தங்களுடைய சொத்துகளை விற்று தங்கள் நாட்டின் பெறுமதியில் ஒவ்வொருவரும் எட்டு இலட்சம் ரூபாய் வழங்கி படகை கொள்வனவு செய்து கடந்த டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி அங்கிருந்து புறப்பட்டதாகவும் அகதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, திருகோணமலைக்கு கொண்டு செல்லப்பட்ட மியன்மார் படகில் பயணித்த 11 பேரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

படகை செலுத்தி வந்த குற்றச்சாட்டில் இந்த 11 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.(எ)

# பாராளுமன்றத்தில் சி. ஐ. டி. விசாரணை

கொழும்பு, டிசெ.22

பாராளுமன்ற இணையத்தளத்தில் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதி பட்டம் குறிப்பிடப்பட்டமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று, சம்பந்தப்பட்ட பாராளுமன்ற அதிகாரிகளிடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதற்காக அந்தத் துறையின் சிறப்பு அதிகாரிகள் குழு பாராளுமன்றத்துக்கு வருகை தந்தது.

இதன்போது, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், பாராளுமன்ற அதிகாரிகள் மூவரிடம் வாக்கு மூலம் பதிவு செய்தனர்.

அந்தத் தகவல்கள் இணையத்தளத்தில் இடம்பெற்றமைக்கு அடிப்படையாகக் கூறப்படும் பல கடிதங்களை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் பாராளுமன்ற அதிகாரிகள் கையளித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

பாராளுமன்ற இணையத்தளத்தில் தனது பெயருக்கு முன்னால் வைத்திய கலாநிதி என்ற பட்டத்தை குறிப்பிட்டு தனக்கு அவதூறு ஏற்படுத்தியதாக சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார அண்மையில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இதன்படி, சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(எ)

# வடக்கு பனைசார் உற்பத்திப் பொருட்களை 3500 மில்லியனுக்கு ஏற்றுமதி செய்ய திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.22

வடக்கு மாகாணத்தில் இருந்து சுமார் 3500 மில்லியன் ரூபாய் பெறுமதியான பனை சார் உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பனை அபிவிருத்தி சபை எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியாத சூழ்நிலையில் அதனை நான் பொறுப்பெடுத்த நிலையில் பல்வேறுபட்ட அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகிறேன்.

2025 ஆம் ஆண்டு வடக்கிலிருந்து 3500 மில்லியன் ரூபாய் வருமானத்தை எதிர்பார்த்து பனை சார் உற்பத்தி பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் சுமார் 3000 மில்லியன் ரூபாய்க்கான கோரிக்கைக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஐரோப்பா, அமெரிக்கா, கனடா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் எமது பனை வளத்திற்கான சிறந்த சந்தை வாய்ப்புகள் கிடைக்கும் நிலையில் ஏற்றுமதி மூலம் அதிக இலாபத்தை ஈட்ட முடியும்.

பனை வளம்சார் உற்பத்திகளில் 95 ஆயிரம் பேர் ஈடுபட்ட நிலையில் அவர்களின் தேவைப்பாடுகள், குறைபாடுகளை நிவர்த்தி செய்யாத காரணத்தால் குறித்த உற்பத்தி துறை தற்போது 5,000 பேர் வரை சுருக்கப்பட்டுள்ளது.

ஆகவே, 2025 ஆம் ஆண்டு பனை சார் உற்பத்திப் பொருட்கள் மூலம் இலங்கையின் மொத்த தேசிய வருமானத்துக்கு பங்களிப்பு செய்யும் வகையில் எமது திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (எ-05)

# அமைச்சர்களின் சொகுசு வீடுகள் சுற்றுலா பயணிகளுக்கு ஒதுக்கீடு

## வருமானத்தை அதிகரிக்க அரசு திட்டம்

கொழும்பு, டிசெ.22

அமைச்சர்களின் சொகுசு வீடுகளில் பாதியை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக ஒதுக்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

அதற்காக புராதன மதிப்புகள் கொண்ட அமைச்சர் வீடுகள் ஒதுக்கப்படும் என்று கூறிய அவர், இதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இதேவேளை, சொகுசு வீடுகள் தொடர்பில் விசேட கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும்

எந்தெந்த அமைச்சகங்கள் அந்த அமைச்சர் வீடுகளுக்கு சொந்தமானவை, அந்த வீடுகளுக்கு சொந்தமான சொத்துக்கள் என்ன என்பது உட்பட பல விடயங்கள் இங்கு காணப்படுகின்றன.

இதேவேளை, அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளை தொடர்ந்தும் வழங்க எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளது.

கொழும்பில் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொகுசு வீடுகளின் எண்ணிக்கை 35 ஆகும். (எ)

# வடக்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வுகாணப்படும்

## ஆளுநர் வேதநாயகன் வாக்குறுதி



யாழ்ப்பாணம்,டிசெ.22

வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்ந்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை கடற்றொழில் அமைச்சருக்கு பரிந்துரைக்கவுள்ளதாகவும் இவற்றை விரைந்து தீர்ப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஆளுநர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ சமூகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்கள், நெக்டா, நாரா நிறுவனப் பிரதிநிதிகள், வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர், வடக்கு மாகாண காணி ஆணையாளர் ஆகியோரும் பங்கேற்றனர். இவர்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமரும் கலந்து கொண்டார்.

இதன்போது உரையாற்றிய ஆளுநர்,

வடக்கு மாகாணத்தின் பிரதான பொருளாதார வளமாக விவசாயம் மற்றும் மீன்பிடி என்பன இருக்கின்றன. இந்தத் தொழில்களை முன்னெடுப்பவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும். மீனவ சமூகங்கள் பல பிரச்னைகளை எதிர்கொள்வது எனக்குத் தெரியும். அவை தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு, கடற்றொழில் அமைச்சருக்குப் பரிந்துரைகள் அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர், வடக்கு மீனவர்களின் பிரச்னை தொடர்பில் கூடுதல் அக்கறை செலுத்துவதாகவும் சுட்டிக்காட்டிய ஆளுநர், அவர் ஊடாக எதிர்காலத்தில் இங்கு அடையாளம் காணப்படும் விடயங்களை தீர்த்து வைக்க முடியும் என நம்புவதாகவும் குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிரிஹானையிலிருந்து திருகோணமலைக்கு திருப்பி அனுப்பப்பட்ட மியன்மார் அகதிகள்!

## குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அனுமதி கிடைக்கவில்லை

திருகோணமலை, டிசெ.22

**திருகோணமலையில் இருந்து மிரிஹானை இடைத்தங்கல் முகாமுக்கு நேற்று சனிக்கிழமை காலை அனுப்பி வைக்கப்பட்ட மியன்மார் அகதிகள் மீளவும் திருகோமலைக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.**



முள்ளிவாய்க்காலில் இருந்து திருகோணமலைக்கு கொண்டு செல்லப்பட்ட மியன்மார் அகதிகள் நேற்று முன்தினம் மாலை திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, தமது நாட்டில் வாழ முடியாத காரணத்தால் தமது நிலங்களை விற்று, தஞ்சம் கோரி இலங்கைக்கு படகில் வந்ததாக அகதிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சட்டவிரோதமான முறையில் இலங்கை கடற்பரப்புக்குள் உள்நுழைந்ததாக குற்றம் சாட்டப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டதுடன் அவர்களை கூட்டி வந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 11 பேரை விளக்கமறியலில் வைக்குமாறும் ஏனையோரை முகாமில் தங்கவைக்குமாறும் நீதிபதி அர்யூன் அரியரெட்ணம் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த வழக்கு மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வெள்ளிக்கிழமை இரவு தங்கவைக்கப்பட்டிருந்த 104 மியன்மார் பிரஜைகளும் நேற்றுக் காலை 7. 30 மணிக்குப் பின்னர் பொலிஸாரால் 2 பேருந்துகளில் மிரிஹானை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட் டனர்.

இந்த நிலையில், இந்த பயணிகள் அடங்கிய பஸ்கள் இடைநடுவே சில மணிநேரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்து, பின்னர், பகல் வேளையில் திருகோணமலைக்கு அகதிகள் மீள அழைத்துச் செல்லப்பட்டனர்.

குறித்த மியன்மார் பிரஜைகளை மிரிஹானை முகாமில் தங்கவைப்பதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் அனுமதி கிடைக்காததன் காரணமாக அவர்கள் மீண்டும் திருகோணமலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், திணைக்களத்தின் அனுமதி கிடைத்ததும் நாளை திங்கட்கிழமையளவில் குறித்த முகாமுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொலிஸாரின் பாதுகாப்புடன் ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இந்த மியன்மார் பிரஜைகளை யு. என். எச். ஆர். பிரதிநிதிகள் பார்வையிட்டதுடன் அவர்களிடமிருந்து தகவல்களையும் பதிவு செய்தனர்.

அத்துடன் அவர்களுக்கான உணவு உட்பட ஏனைய தேவைகளை அரச திணைக்களங்களும் தொண்டர் நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றன.

கடந்த 19 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் 115 பயணிகளுடன் கரையொதுங்கிய மியன்மார் படகானது மறுநாள் காலை திருகோணமலை அஷ்ரப் துறைமுகத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது.

படகில் வந்த மியன்மார் அகதிகளில் கர்ப்பவதி ஒருவர் உட்பட 39 ஆண்களும் 27 பெண்களும் 49 சிறுவர்களும் அடங்குகின்றனர் என்று அதிகாரிகள் கூறினர்.(எ)

# 15 முன்னாள் அமைச்சர்களின் விமான பயண விவரம் கசிவு

## 25 விமானங்களை பயன்படுத்திய சஜித்

கொழும்பு, டிசெ.22

கடந்த காலங்களில் இலங்கை விமானப் படையின் விமானங்களை பல்வேறு பயண மற்றும் போக்குவரத்து தேவைகளுக்காக 15 (முன்னாள்) அமைச்சர்கள் பயன்படுத்தியதாக இலங்கை விமானப்படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த அமைச்சர்களின் போக்குவரத்து தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை 66 ஆகும்.

முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீரவுக்கு பத்து விமானங்களும், தயா கமகேவுக்கு ஒரு விமானமும் சம்பிக்க ரணவக்கவுக்கு மூன்று விமானங்களும், ரவி கருணாநாயக்கவுக்கு ஆறு விமானங்களும், வஜிர அபேவர்த்தனவுக்கு ஒரு விமானமும், ராஜித சேனாரத்னவுக்கு மூன்று விமானங்களும், சாகல ரத்நாயக்கவுக்கு மூன்று விமானங்களும், எம். எச். எம். ஹலீமுக்கு ஒரு விமானமும், ஜோன் அமரதுங்கவுக்கு ஒரு விமானமும், அஜித் நிவாட் கப்ராலுக்கு இரண்டு விமானங்களும், ரொஷான் ரணசிங்கவுக்கு ஒரு விமானமும், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு ஒரு விமானமும், நாமல் ராஜபக்ஷவுக்கு ஆறு விமானங்களும், சஜித் பிரேமதாஸவுக்கு 25 விமானங்களையும், அலி சப்ரி இரண்டு விமானங்களையும் பெற்று பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விமான பயணங்களில் பெரும்பாலானவை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, இலங்கை விமானப்படை தலைமையகத்தில் இருந்து கிடைத்த பதில் அறிக்கையில் இந்த தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# சடுதியாகக் குறைந்த முட்டை விலை!

கொழும்பு,டிசெ.22

இலங்கையில் சில பகுதிகளில் முட்டை விலை சடுதியாகக் குறைந்து வருவதாக தெரியவந்துள்ளது.

ஜாஎல, கந்தானை, ராகம உள்ளிட்ட பிரதேசங்களில் இவ்வாறு முட்டை விலை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, முன்னர் 40 ரூபாய் தொடக்கம் 45 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்ட முட்டை தற்போது 25 ரூபாய் தொடக்கம் 30 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் கூறினர். (எ)

# மட்டக்களப்பில் பாவனைக்கு உதவாத 481 மென்பான போத்தல்கள் கைப்பற்றல்

## உற்பத்தியாளர் உட்பட மூவருக்கு ரூ. 60, 000 அபராதம்

மட்டக்களப்பு, டிசெ.22

பாவனைக்கு உதவாத செயற்கையான பொருட்கள் சேர்க்கப்பட்டு சந்தையில் விற்பனை செய்யப்பட்ட பெருமளவிலான மென்பான போத்தல்கள் மட்டக்களப்பில் சுகாதார அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. சுமார் 481 மென்பான போத்தல்கள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். முரளீஸ்வரனின் ஆலோசனையின் பேரில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி இ. உதயகுமாரின் வழிகாட்டலில் கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் ரி. மிதுன்ராஜ் தலைமையிலான பொதுச் சுகாதார அதிகாரிகள் திடீர் தேடுதலை நடத்தி மனித பாவனைக்கு உதவாத மென்பானங்களை கைப்பற்றியிருந்தனர்.

இந்த நிலையில் விற்பனையாளர் மற்றும் விநியோகஸ்தர் ஆகியோருக்கு தலா 15, 000 ரூபாய் வீதமும் உற்பத்தியாளருக்கு 30 ஆயிரம் ரூபாயுமாக 60 ஆயிரம் ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டது.

குறித்த மென்பானங்களை அழிக்குமாறும் ஏனைய விற்பனை நிலையங்களில் இருக்கும் பானங்களை அகற்றுமாறும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்ஷினி உத்தரவிட்டார்.

இதற்கமைய மனித பாவனைக்கு உதவாத மென்பானங்கள் அழிக்கப்பட்டன.(எ)

# 67,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி!

கொழும்பு,டிசெ.22



தனியார் துறையின் அரிசி இறக்குமதிக்கான காலக்கெடு நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவடைவதற்கு முன்னர் வர்த்தகர்களால் 67, 000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதாக இலங்கை சுங்கத் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

உள்ளூர் சந்தைகளில் நிலவும் அரிசி பற்றாக்குறை மற்றும் விலை உயர்வால் உள்நாட்டு விநியோகத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த இறக்குமதி இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கிராம உத்தியோகத்தர் மீது ஐவர் கொண்ட குழு தாக்குதல்

வாழைச்சேனை, டிசெ.22

மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாசிவன் தீவு கிராமத்தில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர் வெளிக்கள கடமை நிமித்தம் அலுவலகம் திரும்பும் வழியில் மதுபோதையில் வந்த குழுவொன்றால் தாக்குதலுக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிப்புக்குள்ளானவர் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் வேளை இந்தச் சம்பவம் நாசிவன் தீவு துறையடியில் இடம்பெற்றுள்ளது.

பிரதேச வாசி ஒருவர் கடந்த ஒரு வாரங்களுக்கு முன்பு பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றினுள் அத்துமீறி நுழைந்து காணியை சுற்றி வேலி அமைத்திருந்த தகவல் அறிந்து தாம் நேரில் சென்று அதனை அகற்றுமாறு கூறியபோது அந்த இடத்தில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டதாக கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

குறித்த காணி விடயம் தொடர்பில் மேற்படி நபர் எனது அலுவலகத்துக்கு வருகை தந்து முரண்பாட்டில் ஈடுபட்டதாகவும் இதன்போது இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டதாகவும் கூறினார்.

பின்னர் வெளிக்கள கடமை நிமித்தம் தான் வெளியில் சென்றபோது குறித்த நபர் உட்பட 5 பேர் கொண்ட குழுவினர் தன்னை தாக்கியதாக தெரிவித்தார். இதன்போது சம்பவத்தை கண்ட பொது மக்கள் சிலர் தம்மை அவர்களிடமிருந்து பாதுகாத்ததாக கிராம உத்தியோகத்தர் குறிப்பிட்டார்.

தாக்குதல் சம்பவம் பற்றி அறிந்த கோறளைப்பற்று பிரதேச செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் நேரில் சென்று கிராம உத்தியோகத்தரை பார்வையிட்டனர். (எ)

# சிறைச்சாலை பஸ்ஸிலிருந்து சந்தேக நபர் தப்பியோட்டம்

## சம்மாந்துறை நீதிமன்ற வளாகத்தில் சம்பவம்

சம்மாந்துறை, டிசெ.22

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரை நீதிமன்றத்துக்கு கொண்டு வந்த நிலையில் அவர் தப்பியோடிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. குறித்த நபரை பொலிஸார் உட்பட சிறைச்சாலை அதிகாரிகள் தேடி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

28 வயது சந்தேக நபரே மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்துக்கு வழக்கு ஒன்றுக்காக சிறைச்சாலை பஸ்ஸில் கொண்டுவரப்பட்ட போது தப்பிச் சென்றுள்ளார்.

கடந்த 07 ஆம் திகதி குறித்த நபர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்ததுடன் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
22.12.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், மார்கழி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 205 2300**

# இந்தியாவின் ஈடுபாடு தளர்கின்றதா?

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் புதுடில்லி விஜயத்தின் போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருக்கின்றன. பொதுவாக இலங்கையின் அரச தலைவர்கள் புதுடில்லி செல்கின்ற போது, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேசப்படுவது வழக்கமான ஒன்றாகும் - அந்தப் பேச்சில் 13வது திருத்தச்சட்டம் வலியுறுத்தப்படும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்ட 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில் இன்றுவரையில் முன்னேற்றங்களை காண முடியவில்லை. இதற்கு தமிழ் தலைமைகள் என்போரின் புத்திசாலித்தனமற்ற அரசியல் அணுகுமுறைகளும் ஒரு காரணம்தான். ஆனாலும் ஈழத் தமிழர் விவகாரம் என்று வருகின்ற போது, இந்தியாவின் நிலைப்பாடாக இருப்பது 13ஆவது திருத்தச்சட்டம்தான்.

இம்முறை இந்திய பிரதமர் மோடி தமிழ் மக்கள் விவகாரம் தொடர்பில் பேசுகின்ற போது 13ஆவது திருத்தச்சட்டத்தை குறிப்பிடாமல் அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்துவது மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது பற்றியே பேசியிருக்கின்றார். அநுரகுமார திஸநாயக்க அரசாங்கம் இலங்கையின் அரசியல் யாப்பை அமுல்படுத்துவதன் ஊடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் என்று தாங்கள் எதிர்ப்பார்ப்பதாகவே, மோடி குறிப்பிட்டிருக்கின்றார். 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அழுத்திக் குறிப்பிடாமையால் புதுடில்லியின் வழக்கமான அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதான முடிவுக்கு வர முடியுமா?

ஆனால், இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்துவது பற்றிய தனது எதிர்பார்ப்பை வெளிப்படுத்தியிருப்பதானது, அடிப்படையில் 13ஆவது திருத்தச்சட்டம் பற்றியதுதான். ஆனால், அதனை புதுடில்லி மறைமுகமாக குறிப்பிட்டிருக்கின்றது. ஒரு வேளை அநுரகுமார அரசாங்கத்திற்கு தர்மசங்கடத்தைக் கொடுக்கக் கூடாதென்னும் நோக்கிலும் அவ்வாறு தெரிவித்திருக்கலாம் அல்லது அவ்வாறானதொரு வேண்டுகோளை அரசாங்கமே முன்வைத்திருக்கலாம். கொழும்பு திரும்பிய வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், 13ஆவது திருத்தச்சட்டம் இலங்கை அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருப்பதால், அதுபற்றி இந்தியாவுடன் பேசவேண்டிய தேவை வரவில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், அதனை அமுல்படுத்தாமல் இருப்பது பற்றி தமிழர் தரப்பு யாரிடம் முறையிட முடியுமென்பதுதான் கேள்வி.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாகாண சபை தொடர்பில் தெளிவான கொள்கை நிலைப்பாடுகளை இதுவரையில் வெளிப்படுத்தவில்லை. ஆனால், ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மாகாண சபை முறைமையால் நாட்டுக்கு நன்மையில்லை என்று குறிப்பிட்டிருந்தார் எனினும் புதிய அரசியலமைப்பு வரும் வரையில் அது நடைமுறையில் இருக்குமென்றும் குறிப்பிட்டிருக்கின்றார். இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்ட போது, அது கட்சியின் பொதுச் செயலாளரின் கருத்து என்று பதிலளிக்கப்பட்டது.

மோடியின் கருத்தின் அடிப்படையில் இந்தியா ஈழத் தமிழர் விடயத்தில் அதன் ஈடுபாட்டை தளர்த்துகின்றது - ஒரு வேளை அரசாங்கம் 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க முற்பட்டால், இந்தியா அதில் தலையீடு செய்யாமல் விட்டுவிடும் என்னும் முடிவுக்கு நாம் உடனடியாக வர வேண்டியதில்லை. ஆனால், தமிழர்களும் தேவையில்லை என்று நிராகரித்தால் அப்படியான ஒன்றை பாதுகாப்பதில் இந்தியாவின் தார்மீகப் பொறுப்பு என்ன என்னும் கேள்வி எழலாம்.

இந்த விடயத்தில் பந்து ஈழத் தமிழர் தலைமைகளின் கையில்தான் இருக்கின்றது. தமிழ் அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் போக முடியாத ஊருக்கு வழிசொல்லிக் கொண்டிருக்கப் போகின்றார்களா அல்லது இருப்பதை பயன்படுத்துவதன் ஊடாக முன்நோக்கிப் பயணிக்கப் போகின்றனரா? இந்தப் பின்புலத்தில் நோக்கினால், ஈழத் தமிழர் தலைமைகளின் அரசியல் முதிர்ச்சியில்தான் இந்தியாவின் ஈடுபாடு தங்கியிருக்கின்றது.

# பரிசோதனைக்காக கால்நடைகளிலிருந்து இரத்தமாதிரி பெறும் முதல் கட்டம் நிறைவு

## எலிக்காய்ச்சல் தொற்று குறித்து கண்டறிவதற்காக

வடமராட்சி, டிசெ. 22

எலிக் காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி மற்றும் சாவகச்சேரிப் பகுதியில் அண்மை நாட்களாக பலர் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து இப்பகுதியில் உள்ள கால்நடைகளினால் லிட்ரோபைரசியஸ் வைரஸ் தொற்றியிருக்கலாம் என்பதைக் கண்டறிய விலங்குப் புலனாய்வு அதிகாரிகளால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் மருதங்கேணி கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மணற்காடு, குடத்தனை, அம்பன் பகுதிகளில் விலங்குகளில் இருந்து இரத்த மாதிரி பெறும் நடவடிக்கை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் விலங்குப் புலனாய்வு அதிகாரி வைத்தியர் அமுதா பிரபாகரன் தலைமையிலான குழுவினரும் கிளிநொச்சி விலங்குப் புலனாய்வு அதிகாரி ரேணுகா கௌரிதிலகன் தலைமையிலான குழுவினரும் 400 வரையான விலங்குகளின் இரத்த மாதிரிகளை சேகரித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை பேராதனையிலிருந்து இருந்து விலங்கு தொற்றுநோயியல் பிரிவினர் வருகை தந்து எலிக் காய்ச்சலினால் உயிரிழந்தவர்களின் வீடுகள், அதனை அண்மித்த பகுதிகளில் நேரடியாக பார்வையிட்டு ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.



இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக ஆடு மற்றும் மாடுகள், பன்றி போன்ற விலங்குகளில் இருந்து இரத்த மாதிரிகள் கடந்த மூன்று நாட்களாக விலங்குப் புலனாய்வுப் பிரிவினரால் பெறப்பட்டுள்ளன.

விலங்குகளில் இருந்து பெறப்பட்ட 400 வரையான இரத்த மாதிரிகளும் பேராதனையில் அமைந்துள்ள விலங்கு நோயியல் தலைமைப் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. இந்த வகையில் நேற்றுடன் இரத்த மாதிரிகள் பெறும் முதலாம் கட்ட நடவடிக்கை நிறைவு பெற்றுள்ளதாகவும் இதன் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே அடுத்த கட்ட நடவடிக்கை தொடருமெனவும் விலங்குப் புலனாய்வு அதிகாரி வைத்தியர் அமுதா பிரபாகரன் தெரிவித்தார். (அ-02)

# கிளிநொச்சியில் பொலிஸார் நேற்று திடீர் வீதிச் சோதனை

கிளிநொச்சி, டிசெ. 22

கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸா நேற்று மோப்ப நாய்களுடன் திடீர் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

எதிர்வரும் நத்தார் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, கிளிநொச்சி பொலிஸார் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வீதி ஒழுங்குகளை மீறுபவர்கள் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில், நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதானால் நேற்று ஏ-9 வீதியில், மோப்ப நாய்களுடன், வாகனங்களைச் சோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (அ)

# கோப்பாயில் முன்பள்ளி கலைவிழா






யாழ்ப்பானம், டிசெ, 22

கோப்பாய் ரெயின்போ முன்பள்ளியின் கலைவிழா நேற்றுக் காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் முன்பள்ளி அதிபர் அனுஜா அருள்நேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் புத்தூர் பஞ்சசீக வித்யாலய அதிபர் கவிதா லலீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினராக ஆரம்பக் கல்வி மூத்த ஆசிரியர் துவாரகா செந்தில் நேசனும் ரெயின்போ முன்பள்ளியின் முன்னாள் ஆசிரியர் ஜீவிதாசன் டினோஜாவும் கலந்து கொண்டனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள் உலகம் மீளட்டும்!

- என். மாதவன்



அது அமெரிக்காவின் கடைவீதி. ஒருவர் பல்வேறு கடைகளுக்குள்ளும் நுழைகிறார். தாம் தேடும் பொருள் கிடைக்காத மனநிலையோடு அடுத் தடுத்த கடைக ளுக்கும் செல்கிறார். அவரை எதிர்ப்படும் ஒருவர், என்ன பொருளை அவர் தேடுகிறார் என வினவு கிறார். 'குழந்தைகள் பயன்படுத்தும் டவல், மேஜை, நாற்காலி போன்ற பொருள்கள் கிடைக்குமா என்று தேடுகிறேன். அது எங்கும் கிடைப்பதாயில்லை' என்று வருத்தத்துடன் பகிர்கிறார். பின்னர் கடையில் கிடைக்காவிட்டால் என்ன தாமே தயாரித்து அறிமுகம் செய்வோம் என தமது முயற்சியைத் தொடங்குகிறார். அவர், நியூயார்க் நகரின் கொலம்பியா பல்கலைக்கழகப் பேராசிரியரும் குழந்தை மையக் கல்வியாளருமான ஜான் டுயீ.

இன்றைக்கு நிலைமை மிகவும் மாறியுள்ளது. பெரிய உணவகங்களுக்குச் சென்றால் அங்கு சிறுவர்களுக்காக கைகளைக் கழுவும் இடம் உயரம் குறைவாகத் தனியாக அமைக்கப்பட்டுள்ளது. பெரிய பெரிய நூலகங்களில் சிறார்களுக்கென்று தனிப்பகுதிகள் அமைக்கப்படுகின் றன. பூங்காக்களில் கூட சிறார்கள் விளையாடுவதற்கான விளையாட்டுப் பொருள்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை எல்லாம் ஆரோக்கியமான மாற்றங்கள்.

கடைகள் எங்கும் குழந்தைகளுக்கான பலவிதமான விளையாட்டுப்பொருள்கள் வெகுவாக கிடைக்கின்றன. மரம், பிளாஸ்டிக் போன்றவற்றால் ஆனதாகவே இவை உள்ளன. பொதுவாக ஒரளவுக்கு உறுதித்தன்மை மிக்க தானதாக இவை இருப்பதால் பெரும்பாலும் விரும்பி வாங்கப்படுகின்றன. குறிப்பிட்ட வயது வரை மட்டுமே இப்படிப்பட்ட பொருட்களைக் கையாண்டு குழந்தை கள் விளையாடுவார்கள். அதன் பின்னர் அவர்களுக்கு அலுப்புத் தட்டிவிடும்.

மேலே பகிர்ந்த விவரங்களிலிருந்து இரண்டு விஷ யங்கள் நமக்குத் தென்படும். ஒன்று, குழந்தைமையை மிகவும் போற்றி வளார்ப்பதுபோல் குழந்தைகளுக்கு எவ்வித இன்னலும் இல்லாமல் பார்த்துக் கொள்கி றோம். அவர்கள் விளையாடும் பொம்மைகள் அடங்கிய பை உள்ளிட்ட அவர்களது உடைமைகளை உடன் கொண்டு செல்கிறோம். மற்றொருவகை, குழந்தைகளை அவர்கள் போக்கில் வளரவிட்டுவிடுகிறோம். உண்மை யில் குழந்தைகள் தமது குழந்தைமையை அனுபவிக்க அதிக அளவிலான செல்வ வளத்திற்கான தேவை எதுவுமில்லை.

குழந்தைகள் ஒவ்வொரு கணத்தையும் தமது மகிழ் வைத் தாமே உண்டு பண்ண வல்லவர்கள். அவர்களுக்கு படைப்பாற்றல் மிகவும் அதிகம். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களுடைய ஆசைகள் இயல்பில் மிகவும் சிறியவை. பாதுகாப்பு அம்சங்களை உறுதி செய்து விட்டு அவர்களை அவர்கள் போக்கில் விட்டுவிட்டால் போதும் அவர்கள் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்று மகிழ்வார்கள்.

வறுமையிலும் குழந்தைகள் தமது குழந்தைமை யினை அனுபவிக்க ஏற்ற நாடாக இந்தியா இருந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு காலத்தில் நமது கலாசாரம் குழந்தைகளுக்கான எளிய விளை யாட்டுப் பொருட்களை அளவுக்கதிகமாகவே கொண் டிருந்தது என்பதை மறந்துவிடக் கூடாது. சில விளை யாட்டுப் பொருட்களை இங்கே மீள நினை வூட்டுவோம். கிராமப்புறங்களில் விற்ற கிளி பொம்மை, வண்ண வண்ணக் காற்றாடிகள். சிறிய ஓலைத் துண்டில் ஒரு முள்ளைக் குத்திக் கொடுத்தால் போதுமே என்ன அழகான விளையாட்டுப்பொருள் அது? சிறிய பிளாஸ் டிக் உடன் இணைந்த ரப்பர் பந்தினை தரையில் அடித்து விளையாடும் மகிழ்வை வேறு எது கொடுக்க இயலும்? விளையாட்டுத் துணைவர்கள் இல்லாமல் கூட நேரம் செலவாகுமே.

காகிதங்களைக் கொண்டே பல்வேறு பொம்மைகள், விளையாட்டுப் பொருட்களைச் செய்து விளையாடி மகிழ்ந்த காலம் ஒன்று உண்டு. காகிதத்தில் ஆகாய விமா னம், தையல் இயந்திரம், புகைப்படக் கருவி, இன்னும் என்னதான் இல்லை? பலவற்றையும் செய்து மகிழ்ந்திருக் கிறோம். மழைக்காலமாகிவிட்டால் கேட்கவே வேண் டாம். காகிதத்தில் கப்பல், கத்திக் கப்பல், ராஜா ராணி கப்பல் போன்றவற்றை செய்து தெருவில் செல்லும் வெள்ளத்தில் விட்டு மகிழ்ந்திருப்பார்கள்.

இப்படி நாம் சொல்லும்போது, இப்போது எல்லாம் எந்த குழந்தைகள் இந்த விளையாட்டெல்லாம் விளை யாடுகிறார்கள்? எல்லோரும் கைப்பேசியில் அல்லவா விளையாடிப் பொழுதைச் செலவிடுகிறார்கள் என்ற வாதம் நிச்சயம் வரவே செய்யும். இந்த குழந்தைகளை கைப்பேசி விளையாட்டுகளில் புகுத்திவிட்டு பெற் றோர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

முற்காலங்களில் திருமணம், புதுமனை புகுவிழா போன்ற வீட்டு நிகழ்வுகளை கொஞ்சம் திரும்பிப் பார்ப் போம். அந்த நிகழ்விடங்களில் ஓடியாடி குழந்தைகள் அந்த இடத்தினை உயிர்ப்பிப்பார்கள். ஆனால் இன் றைக்கு பெரியவர்களுக்கு இணையாக ஒரு நாற்காலியில் அமர்ந்துகொண்டு கைப்பேசியில் விளையாடும் குழந்தைகளைத்தான் காண முடிகிறது. எல்லா இடங்களிலும் பெரியோர்கள் போலவே குழந்தைகளும் அமர்ந்திருப்பதே ஒழுங்கு என கற்பிக்கப்படுகிறது. இவ்வாறில்லாமல் குழந்தைகள் இயங்குவது அநா கரீகமாகப் பார்க்கப்படும் என்ற எண்ணத்தில் பெரும் பாலும் குழந்தைகளை நிகழ்வுகளுக்கு வெளியே அழைத் துச் செல்வதில்லை. அவ்வாறு அழைத்துச் சென்றாலும் இவ்வாறு கைப்பேசியைக் கொடுத்து ஆணி அடித்தது போல் அமர வைத்துவிடுகின்றனர்.

இன்றைக்கு இருக்கும் உலகம் பெரியவர்களுக்கு வசதியாக இருக்கிறது ஆனால் குழந்தைகளுக்கு வசதியா னதாக இல்லை என்று புலம்பினார் லியோ டால்ஸ் டாய். ஆம் இன்றைக்கும் பெரியோர் உலகையே சிறிய வயதில் குழந்தைகளுக்குக் காட்டிக்கொண்டிருக்கிறோம். அவர்களுக்கான உலகம் பரந்தது, நெடியது அழகானது. எளிய பொருள்களால் அந்த உலகம் நிரம்பினால் எளிமையும், வலிமையும் அவர்களிடம் நிறையும்.

## இந்தவார ராசிபலன் 22.12.2024 - 28.12.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - மார்கழி 07

நல்ல நேரம்: 09.25 - 10.55 ராகு காலம் : 04.25 - 06.25 திதி : ஸப்தமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்தி குறையும் வாய்ப்பு ஏற்படலாம். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். மாணவர்களுக்கு கல்வி யில் தேர்ச்சி உண்டு. ஆசிரியர்களின் ஆலோசனைப்படி ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். தொலைதூர செய்திகள் நன்மையும் மகிழ்ச்சியும் தரும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற மகிழ்ச்சி பொங்கும் தரு ணங்களால் புதிய உறவுகள் ஏற்படும். நண்பர்களுடன் வெளி வட்டா ரங்களில் சுற்றுவதால் செலவுகளை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற் படும். புதிய தொழில் முயற்சிகளில் கவனம் செலுத்தினால் தனவரவு அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு பொருள்களின் இருப்புக் கூடுவதால் வியாபாரம் அதிகரிக்கும். பக்தி சொற்பொழிவுகளைக் கேட்பதால் ஞானம் பெருகும். இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் தாயின் அன்பும், அரவணைப்பும் கவலைகளை மறக் கச் செய்யும். இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு உண்ணவும் நேரம் இருக்காது. பெண்கள் அதிகாலையில் எழுந்து பூஜா காரியங்களில் ஈடுபட்டு மன மகிழ்ச்சி அடைந்து, நிம்மதியும் பெறுவர். அரசு வகை வரிப் பாக்கிகள் செலுத்துவதற்கு தேவையான பணவுதவி கள் கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மிக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட் டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகள் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக் கும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். வீட்டில் பிடிவாதங்களை தளர்த்தினால் பிணக்குகள் தீரும். இடம் சம்பந்தமான வழக்குகள் வெற்றி பெற்று. புதிய சொத்துக்கள் சேரும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங் கும். தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். சிலருக்குப் பணமுடை ஏற்படுவ தோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். பயணங்களில் பிரச்சினைகள் ஏற்படலாம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் ஈடேறும். கவலை வேண்டாம். போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் பெண்களால் இலாபம் ஏற்படும். பொது இடங்களில் தீயவர்களை [illegible] சிக்கல்களில் இருந்து விடுபட உதவும். குழந்தைகளிடம் அன்பாக [illegible]

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் வாக்கால் வருமானம் பெருகும். சுகமும் ஆடை ஆப ரண சேர்க்கை, புத்திர பாக்கியம் ஏற்படும். எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமா னவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். தனவரவு எதிர்பார்த்ததை விட அதிகமாக இருக்கும். பேச்சாளர்களுக்கு, புத்தக வெளியீட்டாளர் களுக்கும் தொழிலில் வெற்றியும், பாராட்டுகளும் கிடைக்கும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பெண்களால் மன மகிழ்ச்சி ஏற்படும். பெரும் புள்ளி களின் அறிமுகத்தால் நன்மைகள் ஏற்படும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும். அரசியலில் சிலருக்கு மாவட்ட பொறுப்புகள் தேடி வரும். உயர் அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் எளிதில் பணி உயர்வு கிடைக்கும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு ம் உங்களுக்குத் தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பல வழிகளில் வருமானம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொண்டால் மன அமைதி கிடைக்கும். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் இழப்பைத் தவிர்க்கலாம். தந்தை வழி உறவினர்களால் பிரச்சனைகள் ஏற்படலாம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமா கக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங் கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள்.தொழில் மூலம் பண வருவாய் அதிகரிக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்றம் காண்பீர்கள். திரு மணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள் ளப்படும். தொழிலில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைக்க வேண்டியது வரும். அவசியமற்ற. அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். மாணவர்களிடம் நல்ல முன் னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் தங்கள் மனதிற்குப் பிடித்த படி அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்தும் உயரும். பால்வளம் பெருகு வதால் ஆதாயம் பெருகும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே நடத்தி முடிப்பீர்கள். கேளிக்கை மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். தேவையற்ற பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது. பணி உயர்வு வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அநுரகுமாரவிடம் 13ஆவது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தலை வலியுறுத்தாததன் மூலம் மோடி கூறிய செய்தி?



வீரகத்தி தனபாலசிங்கம்

ஜனாதிபதி அநுரா குமார திசா நாயக்க கடந்த வாரம் இந்தியா வுக்கு மேற்கொண்ட விஜயம் கடந்த வருடம் அன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட இந்திய விஜயத்தில் இருந்து எந்த அடிப் படையில் வேறுபடுகிறது?

இலங்கையின் ஜனாதிபதிகள் பதவி யேற்ற பிறகு தங்களது முதலாவது உத்தி யோகபூர்வ வெளிநாட்டு விஜயமாக புதுடில்லிக்கு செல்வது ஒரு சம்பிரதாய மாக இருந்துவருகிறது. அதன் பிரகாரம் திசாநாயக்கவும் இந்தியாவுக்கு சென்று வந்திருக்கிறார்.

மூன்றாவது தடைவையாக இந்தியா வின் பிரதமர் பதவியை வகிக்கும் நரேந்திர மோடி இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை ஏற்கெனவே நான்கு இலங்கை ஜனாதிபதிகளுடன் கையாண்டிருந்தார். திசாநாயக்க மோடி சந்தித்த ஐந்தாவது இலங்கை ஜனாதி பதியாவார். முன்னைய ஜனாதிபதிகளை விடவும் கூடுதலான அளவுக்கு பாராளு மன்ற தேர்தலில் மக்கள் ஆணையைப் பெற்ற ஜனாதிபதியாக திசாநாயக்க விளங்குவதை அடிப்படையாகக் கொண்டு இந்திய பத்திரிகையாளர் ஒருவர் பிரதமர் மோடி இலங்கையின் மிகவும் பலம்பொருந்திய ஜனாதிபதி களில் ஒருவரை மாத்திரமல்ல, இடது சாரி ஜனாதிபதி ஒருவரையும் சந்திக்கி றார் என்று கடந்த வாரம் எழுதியிருந் தார்.

முன்னாள் ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியுடனும் வழிகாட்டலுடனும் முன்னெடுத்த அதே பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக் கைகளை வேறு வழியின்றி தொடரு கின்ற ஜனாதிபதி திசாநாயக்க இந்தியாவு டனான உறவுகளைப் பொறுத்தவரையி லும் கூட விக்கிரமசிங்கவின் அணுகு முறையே கடைப்பிடிக்கின்றார் போன்று தெரிகிறது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி யுடன் ஜனாதிபதி திசாநாயக்க நடத்திய பேச்சுவார்த்தைகளின் இறுதியில் கடந்த திங்கட்கிழமை புதுடில்லியில் வெளி யிடப்பட்ட கூட்டறிக்கை கடந்த வரு டம் விக்கிரமசிங்கவின் விஜயத்தின் போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கை யில் கூறப்பட்டவற்றை விட புதிதாக எதையும் கூறவில்லை என்பதே பரவ லான அவதானிப்பாக இருக்கிறது.

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த செயற்திட்டங்களை பொறுத்தவரை பிரதமர் மோடி திசாநாயக்கவிடம் புதிதாக எதையும் கூறியதாக தெரிய வில்லை. அது விடயத்தில் முன்னைய இலங்கை அரசாங்கங்கள் செய்ய வேண்டும் என்று அவர் எதிர்பார்த்த வற்றையே புதிய ஜனாதிபதியிடமும் மீண்டும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். ஆனால், இலங்கை செய்யவேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றவை தொடர்பில் எதையும் நடைமுறையில் செய்யப் போவதாக ஜனாதிபதி திசா நாயக்க உறுதியளிக்காமல் அவை தொடர்பில் பேச்சுவார்த்தைகளை தொடருவதற்கு புதுடில்லியில் இணக் கத்தை தெரிவித்துவிட்டு நாடு திரும்பியி ருக்கிறார்.

இந்தியாவுடன் சேர்ந்து முன்னெ டுப்பதற்கு முன்னைய இலங்கை அர சாங்கங்கள் இணங்கிக்கொண்ட பல செயற்திட்டங்களை இரு தேசிய தேர்தல் களுக்கும் முன்னதாக கடுமையாக எதிர்த்த தேசிய மக்கள் சக்தியின் தலை மைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வின் தலைவர்கள் தற்போது தங்களது அரசாங்கம் மறுத லையாக எடுத்திருக்கும் நிலைப்பாடுகளை நியாயப்படுத்துவதில் பெரிய சவாலை எதிர் நோக்க வேண்டி யிருக்கும்.

குறிப்பாக, இந்தியாவுடன் பொருளா தார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு எட்கா உடன்படிக்கையை (Economic and Technological Cooperation Agreement - ETCA ) செய்துகொள்ளும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற் றும் பிரதமர் விக்கிரமசிங்க தலைமை யிலான அரசாங்கம் எட்டு வருடங்க ளுக்கு முன்னர் தொடங்கிய பேச்சுவார்த் தைகளை ஜே.வி.பி.யின் தலைவராக திசாநாயக்க கடுமையாக எதிர்த்தார்.

எந்த உடன்படிக்கை கைச்சாத்திடப் படுவதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று அன்று திசாநாயக்க சூளுரைத்தாரோ அதே உடன்படிக்கை தொடர்பில் பேச்சுவார்த்தைகளை தொடருவதற்கு புதுடில்லியில் இணக் கத்தை தெரிவித்திருக்கிறார். ஏற்கெனவே முன்னைய அரசாங்கங்களின் கீழ் 'எட்கா' உடன்படிக்கை தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் 14 சுற்று பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றிருக் கின்றன.

ஜனாதிபதி திசாநாயக்க தெரிவித் திருக்கும் இணக்கப்பாட்டை முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்க கடந்தவாரம் பாராட்டி விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

"இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை ஆழ மாக்கி வலுப்படுத்துவதற்கு 'எட்கா' தொடர்பிலும் திருகோணமலையை பிராந்திய சக்திவலு மற்றும் கைத் தொழில் மையமாக அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் பேச்சுவார்த் தைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி திசாநாயக்க இணங்கியிருப்பதை ஒரு பெரிய முன்னேற்றம் என்று மெச்சுகி றேன்." என்று விக்கிரமசிங்க அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு எந்த ஒரு சிறிய பிரச்சி னையையும் தவறவிடக்கூடாது என்ப தில் அதீத அக்கறையாக இருக்கும் எதிர்க்கட்சிகள் இந்திய - இலங்கை கூட்டறிக்கையில் தவறு கண்டுபிடிக்கும் முயற்சிகளில் இறங்கியிருக்கின்றன. இலங்கைக்கு துரோகமிழைக்கும் எந்த உடன்படிக்கையையும் தாங்கள் செய்து விட்டு டில்லியில் இருந்து திரும்பிவர வில்லை என்று ஜனாதிபதியுடன் இந்தியா சென்றிருந்த வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் பாராளு மன்றத்தில் கூறினார்.

ஜனாதிபதி திசாநாயக்கவை பொறுத்தவரை, 1980 களின் பிற்பகுதி யில் இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கைக்கு எதிராக ஜே.வி.பி அதன் இரண்டாவது ஆயுதக் கிளர்ச் சியை முன்னெடுத்த காலப்பகுதியில் இயக்கத்தில் இணைந்து கொண்டவர். நிச்சயமாக அவரின் சிந்தனையில் இந்திய விரோத அரசியலுக்கு பிரதான இடம் இருந்திருக்கும். தற்போது அவர் நாட் டின் ஜனாதிபதியாக இந்தியாவுக்கு விஜயம் செய்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்து வதற்கு உறுதிபூண்டிருப்பதன் மூலமாக தனது அரசியல் வாழ்வில் ஒரு முழு வட்டத்தைச் சுற்றி வந்திருக்கிறார்.

**புதுடில்லியில் ஜனாதிபதி திஸநாயக்கவுடன் செய்தியாளர்களைச் சந்தித்த வேளையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 13ஆவது திருத்தம் பற்றி எதையும் கூறவில்லை. அந்த விலகல் பிரத்தியேகமான கவனத்தைப் பெற்றிருக்கிறது.**

அவரின் இந்தியாவுக்கான உத்தி யோகபூர்வ விஜயம் அவர் தலைமை யிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத் துக்கு சர்வதேச அரசியல் மற்றும் இராஜதந்திர உறவு முறைமையில் ஒரு முழுமையான அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது எனலாம்.

இலங்கைக்கு இந்தியா வழங்கிவரும் பொருளாதார ஆதரவுக்கும் ஒத்து ழைப்புக்கும் மனந்திறந்து நன்றி தெரி வித்த ஜனாதிபதி திசாநாயக்க, இந்தி யாவின் பாதுகாப்பு நலன்களுக்கும் பிராந்திய உறுதிப்பாட்டுக்கும் குந்தக மான எந்தவொரு நடவடிக்கைக்கும் இலங்கை மண் பயன்படுத்தப்படுவதை தனது அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது என்று உறுதியளித்தி ருக்கிறார். இது முன்னைய ஜனாதிபதி களும் அளித்த உறுதிமொழிதான்.

இந்தியாவையும் சீனாவையும் சம தூரத்தில் வைத்து அவற்றுடனான உறவுகளை ஒரு சமநிலையில் பேணு வதில் ஜனாதிபதி அக்கறை கொண்டி ருக்கிறார் என்று தெரிகிறது. இலங்கை யின் தற்போதைய பொருளாதார நெருக் கடி காரணமாக சர்வதேச சமூகத்தின் வல்லாதிக்க நாடுகளை பகைத்துக் கொள்ளாத வகையிலான உறவுகளை பேணுவது இலங்கைக்கு அவசியமா கிறது.

இலங்கையிடமிருந்து இந்தியா எதிர்பார்க்கின்றவை தொடர்பான பட்டியலுடன் நாடு திரும்பிய ஜனாதி பதி அடுத்த மாதம் உத்தியோகபூர்வ விஜயமாக சீனா செல்லவிருக்கிறார். பெய்ஜிங்கில் இருந்தும் ஒரு பட்டியலுடன் தான் அவர் நாடு திரும்ப வேண்டியிருக்கும். இலங்கையில் தங்க ளின் பொருளாதார மற்றும் மூலோபாய நலன்களை பேணுவதில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான புவிசார் அரசியல் போட்டா போட்டிக்குள் இலங் கையை சிக்க வைக்காமல் வழிநடத்திச் செல்வது ஜனாதிபதிக்கு நிச்சயமாக ஒரு சவாலாகவே இருக்கும்.

இது இவ்வாறிருக்க, இந்த தடவை ஜனாதிபதி திசாநாயக்கவுடன் பேச்சு வார்த்தைகளை நடத்திய பிறகு பிரதமர் மோடி இலங்கை இனப்பிரச்சினை குறித்து தெரிவித்த கருத்து முன்னைய ஜனாதிபதிகளின் முன்னிலையில் அவர் கூறியவற்றில் இருந்து ஒரு பிரத்தியேக மான வேறுபாட்டைக் கொண்டிருக் கிறது.

முன்னைய ஜனாதிபதிகளுடன் நடத் திய பேச்சுவார்த்தைகளிலும் அவர்களு டன் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் சந்திப்புகளிலும் இந்தியப் பிரதமர் இலங்கை அரசாங்கம் அரசியலமைப் புக்கான 13 வது திருத்தத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இந்தியாவின் எதிர்பார்ப்பு என்று கூறினார். ஆனால், கடந்த திங்கட் கிழமை புதுடில்லியில் ஜனாதிபதி திசாநாயக்கவுடன் செய்தியாளர்களைச் சந்தித்த வேளையில் மோடி 13 வது திருத்தம் பற்றி எதையும் கூறவில்லை. அந்த விலகல் பிரத்தியேகமான கவ னத்தைப் பெற்றிருக்கிறது.


அது மாத்திரமல்ல, அரசியல், பொரு ளாதாரம் மற்றும் மூலோபாய ஒத்து ழைப்பு ஆகியவற்றை தழுவியதாக 31 அம்சங்களை உள்ளடக்கி வெளியிடப் பட்ட கூட்டறிக்கையிலும் இனப்பிரச்சி னைக்கான அரசியல் தீர்வு பற்றியோ, போரின் முடிவுக்கு பின்னரான நல்லி ணக்கம் மற்றும் தமிழர்களின் அபிலா சைகள் பற்றியோ எதுவும் குறிப்பிடப் படவில்லை.

"இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்து வதுடன் மாகாணசபை தேர்தல்களை யும் நடத்தி அவர்கள் தங்களது கடப் பாட்டை நிறைவு செய்வார்கள் என்று நம்புகிறோம்" என்று மாத்திரம் மோடி செய்தியாளர்கள் முன்னிலையில் கூறி னார். 13 வது திருத்தத்தை பற்றி குறிப்பிடுவதை அவர் திட்டமிட்டே தவிர்த்தார் என்றே தோன்றுகிறது.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி திசாநாயக்க, "வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று சகல மாகாணங்களையும் சேர்ந்த சகல சமூகங்களும் எமக்கு கிடைத்த ஆணைக்கு பங்களிப்புச் செய்தி ருக்கின்றன. மக்களினால் அத்தகைய ஒரு முக்கியமான பொறுப்பு ஒப்படைக்கப் பட்ட ஒரு தலைவர் என்ற வகையில், ஜனநாயகத்தின் சாராம்சம் வெவ்வேறு வகைப்பட்ட அரசியல் சிந்தனைகள் மற்றும் குழுக்களின் சகவாழ்விலேயே தங்கியிருக்கிறது என்பதை நான் தெளி வாக விளங்கிக் கொண்டி ருக்கிறேன் " என்று குறிப்பிட்டார்.

கடந்தகால கூட்டறிக்கைகளில் இலங்கை தமிழர் பிரச்சினை பற்றிய குறிப்புகளில் 13 வது திருத்தத்தின் நடை முறைப்படுத்தல் நிச்சயமாக வலியுறுத் தப்பட்டு வந்தது. இரு நாடுகளினதும்

(14ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் மீதான இந்தியாவின் ஈடுபாடு குறைகின்றதா?



யதீந்திரா

ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்கவின் புதுடில்லி விஜயம் இந்தியளவில் கூடுதல் கரிசனையை ஏற்படுத்தியிருந்தது. ஜே.வி.பியின் கடந்த காலமே இதற்கான காரணமாகும். அநுரகுமார திஸநாயக்க பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை கைப்பற்றியிருக்கின்ற நிலையில், அவரது அணுகுமுறைகள் எவ்வாறு அமையலாம் என்பது பற்றி புதுடில்லி கூடுதல் கரிசனையை காண்பிப்பதில் ஆச்சரியமில்லை. ஏனெனில் நேபாள மற்றும் மாலைதீவு விடயத்தில் புதுடில்லிக்கு நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தது. இலங்கையிலும் அவ்வாறான நெருக்கடிகள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் புதுடில்லி அதிக அக்கறை எடுத்துக் கொள்ளாமல் இருக்க முடியாது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பின் பின்னரான கூட்டு ஊடக சந்திப்பின் போது, மோடி, 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் குறிப்பிடவில்லை - வழமைக்கு மாறாக தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும், அரசியலமைப்பு முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்றே குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் அநுகுமார திஸநாயக்க எதனையும் குறிப்பிடவில்லை. ஆனால் நாடு தழுவிய நிலையில் மக்கள் தங்களுக்கு ஆணை வழங்கியிருப்பதாகவும் இவ்வாறான ஆணை இலங்கை வரலாற்றில் எப்போதும் நிகழாத ஒன்று என்றும் குறிப்பிட்டிருந்தார். பின்னர் வெளியான கூட்டு ஊடக அறிக்கையில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. மோடி ஏன் 13வது திருத்தச்சட்டத்தை தவிர்த்திருக்கின்றார்? இதனடிப்படையில், புதுடில்லி தமிழ் மக்கள் மீதான அதன் ஈடுபாட்டை கைவிட எத்தணிக்கின்றதா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது.

13வது திருத்தச்சட்டத்தின் எதிர்காலம் என்னும் தலைப்பில் கடந்த வாரம் நான் சில விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தேன். ஒரு வாரத்திற்குள் அதன் எதிர்காலம் கேள்விக்குள்ளாகின்றதா என்பது பற்றி சிந்திக்கக் கூடியளவிற்கு நிலைமைகள் வேகமாக மாற்றமடைகின்றன. இந்த மாற்றங்களை உள்வாங்கி தமிழ் அரசியல் சமூகம் தன்னை மாற்றிக் கொள்ளவில்லையாயின், நிலைமைகள் கட்டுப்பாட்டைத் தாண்டிச் சென்றுவிடும். அதன் பின்னர் எதனையும் செய்ய முடியாது.

சுலோகங்களை எவர் வேண்டுமானாலும் உச்சரிக்கலாம் ஆனால் அவ்வாறு உச்சரிக்கப்படும் சுலோகங்களை அடைவதற்கு என்ன வழியுண்டு என்னும் கேள்விக்கு பதிலளிப்பதுதான் சிக்கலானது. சில தினங்களுக்கு முன்னர் இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்டு எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு நினைவு கொள்ளப்பட்டது. இந்த எழுபத்தைந்து ஆண்டு கால அரசியல் அனுபவத்தை மனச்சாட்சியுடனும் நேர்மையுடனும் திரும்பிப் பார்த்தால் எங்களுடைய ஆற்றலை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இந்தக் காலகட்டத்தில் முதல் பகுதி அப்புக்காத்துக்களின் ஆவேச உரைகளுடன் முடிவுற்றது. இரண்டவாது பகுதி, பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் யுவதிகளின் தியாகங்களுடன் நிறைவுற்றது. ஆனால் அடைவு என்ன என்றால் எதுவுமில்லை. நாடாளுமன்ற பேச்சுக்களால் ஆகக் குறைந்தது ஒரு மாவட்ட சபையைக் கூட தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியவில்லை. தனிநாட்டுக்கான கனவுடன் பயணித்தவர்களின் பயணத்தில் நேர்மை இருந்திருக்கலாம் ஆனால் ஒன்றின் மீதான நேர்மையான ஈடுபாடு மட்டும் வெற்றியைத் தந்துவிடாது.

நாம் நம்மை திரும்பிப் பார்த்தால், அரசியலை விளங்கிக் கொண்டு செயற்பட்ட காலத்தை விடவும், அரசியலை விளங்கிக் கொள்ளாமல் செயற்பட்ட காலம்தான் அதிகம். விளங்கிக் கொள்ளாமையின் விளைவுதான் இன்றைய கையறு நிலைமை.

ஈழப் போர் முடிவுற்றதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கத்தை பாராட்டி, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அந்தப் பிரேணையில், இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியான தீர்வு இல்லை. அரசியல் ரீதியில்தான் இந்த விடயம் கையாளப்பட வேண்டும். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதன் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியிருந்தது. இந்த இடத்தை கெட்டியாக பிடித்திருக்க வேண்டும். ஆனால் சம்பந்தன் தரப்பு அதனைச் செய்யவில்லை. இந்தியா குறிப்பிடுவது போன்று, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துதையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்னும் நிலைப்பாட்டை தமிழர் நிலைப்பாடாக கைக்கொண்டிருக்க வேண்டும். இதன் மூலம் மகிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்க முடியும்.

இந்த விடயங்களை விளங்கிக் கொண்டு சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு செயற்பட்டிருக்கவில்லை. இதுதான் நான் மேலே குறிப்பிட்ட அரசியலை விளங்கிச் செயற்படுவதற்கு மாறாக, விளங்கிக் கொள்ளாமல் செயற்படுவது. இதற்கு அடிப்படையான காரணம் என்னவாக இருக்க முடியும்? ஒரேயோரு காரணம்தான். தமிழர் அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எவருக்குமே தமிழ் மக்களைப் பற்றிக் கவலையில்லை. தங்களுக்கு வாக்களிக்கும் ஏழை மக்க ளின் எதிர்காலம் தொடர்பில் சிறிதளவு கூட கரிசனையில்லை. அவர்களின் கரிசனைகள் முழுவதும் தங்களைப் பற்றியதுதான். சிலருக்கோ தங்களை கொள்கை வாதிகளாகக் காட்டிக் கொள்வதில் பேரானந்தம். சிலருக்கோ நாற்காலிகள் போய்விடக் கூடாது என்னும் கவலை - இன்னும் சிலருக்கோ தங்களை பிரமுகர்களாகக் காட்டிக் கொள்வதற்கு ஒரு நாடாளுமன்ற நாற் காலி தேவை. சம்பந்தன் மக்களைப் பற்றி எண்ணியிருந்தால் அவர் அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டத்தையே கையிலெடுத்திருப்பார்.

ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில் 13வது திருத்தச்சட்த்தை அமுல்படுத்தி, மாகாண சபைகளை உச்சபட்சமாகக் கைக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு கிடைத்தது. ஆனால் வரமுடியாத அரசியல் யாப்பிற்கு பின்னால் இழுபட்டு காலத்தை வீண் விரயம் செய்தனர். இந்தக் காலத்தில் இந்தியாவை கூட்டமைப்பினர் திருப்பிக் கூட பார்க்கவில்லை. இந்தியாவின் ஆதரவு இல்லாமலேயே ரணில் மைத்திரியுடனான தேனிலவின் மூலமாக பெரிதாக சாதித்துவிட முடியுமென்றே கூட்டமைப்பு நம்பிக்கொண்டிருந்தது.

> “எழுபத்தைந்து வருட கால அரசியலில் மாவட்ட சபையைக் கூட பெற்றுக் கொடுக்க முடியாத அரசியல் தலைமைகளால், 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் செல்ல முடியுமென்பது நகைச்சுவையாகும். இந்தியாவின் தலையீடு இல்லாதிருந்திருந்தால், மாகாண சபை கூட கிடைத்திருக்காது. இதுதான் உண்மையான அரசியல் நிலைமை. 13ஆவது திருத்தமும் இல்லையென்றால் அதன் பின்னர் ஈழத் தமிழர்களுக்கு எதுவுமில்லை.”

ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு மிகவும் தெளிவானது. 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியா அதன் தார்மீக ஈடுபாட்டை தொடர்ந்தும் காண்பித்து வந்திருக்கின்றது. ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அங்கீகரிக்கும் ஒரேயொரு வெளித் தரப்பு என்றால் அது இந்தியா மட்டும்தான். ஆனால் தமிழர் பக்கத்திலிருந்து தொடர்ந்தும் போலியான அணுகுமுறைகளே வெளிப்படுத்தப்பட்டது. இந்தியா 13வது திருத்தச்சட்டத்தை வலியுறுத்தும் போது, அமைதியாக இருந்துவிட்டு வெளியில் வந்து சமஸ்டி பற்றிப் பேசும் பாசாங்கு அரசியலையே தமிழ்த் தேசியம் பேசியோர் முன்னெடுத்தனர். இவ்வாறானதொரு பின்புலத்தில் அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டத்தை தென்னிலங்கை அரசியல் தரப்புக்களோ இந்தியாவினால் திணிக்கப்பட்ட ஒன்று என்கின்றனர் மறுபுறம் அதில் உறுதியான ஆதரவை வெளிப்படுத்த வேண்டிய தமிழ் தரப்புக்களோ நேர்மையாகச் செயற்படவில்லை. இந்தப் பின்புலத்தில் சிங்களவர்களாலும் தமிழர்களாலும் ஆதரிக்கப்படாத ஒன்றுக்காக தொடர்ந்தும் இந்தியா எவ்வாறு ஆதரவாக இருக்க முடியும் என்னும் கேள்வி எழுந்தால் அது நியாயமான கேள்விதான்.

தற்போது இலங்கையின் அரசியல் சூழல் இன்னும் சிக்கலடைந்திருக்கின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை கொள்கையளவில் எதிர்த்த முன்னாள் ஆயுதக் கிளர்ச்சி அமைப்பான ஜே.வி.பி அதிகாரத்தை கைப்பற்றியிருக்கின்றது. இந்த நிலைமையில் அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டத்தின் எதிர்காலம் உண்மையிலேயே சவாலான ஒன்றுதான்.

ஜேவி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை கைப்பற்றியிருக்கின்றது. இந்த இடத்தில் பெரும்பான்மை என்பதில் தமிழ் மக்களும் உள்ளடங்கியிருக்கின்றனர் என்பதில் சிக்கலுண்டு. இந்த நிலையில் மக்கள் ஆணையின் அடிப்படையில் நாங்கள் சில மாற்றங்களை செய்யப் போகின்றோம் - அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டத்தை தமிழ் மக்களும் விரும்பவில்லை என்னும் நிலைப்பாட்டை அனுரகுமார அரசாங்கம் முன்வைத்தால், இந்தியாவிற்கு ஒரு தர்மசங்கடமான நிலைமை ஏற்படும். ஏனெனில் இது வரையான ஆட்சியாளர்களால் அவ்வாறு வாதிட முடியாமல் இருந்தது - ஏனெனில், தமிழ் மக்கள் அவர்களை பெருவாரியாக ஆதரிக்கவில்லை. வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி பிரதான கட்சியாக வெற்றிபெற்றமையானது இந்தியாவைப் பொறுத்தவரையில் சவாலானது. இந்தப் பின்புலத்தில் இந்தியா என்ன செய்ய முயற்சிக்கும் என்பதுதான் கேள்வி? மோடி 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் குறிப்பிடவில்லை என்பதைக் கொண்டு, உனடியாகவே இந்தியா ஈழத் தமிழர் விடயத்தை கைவிட்டுவிட்டதாக நாம் ஒரு முடிவுக்கு வரமுடியாது ஆனாலும் இந்த விடயத்தை சாதாரணமாக எடுத்துக் கொள்ளவும் கூடாது. நிலைமைகள் கைமீறினால் அதன் பின்னர் பேசிப் பயனில்லை.

எழுபத்தைந்து வருட கால அரசியலில் மாவட்ட சபையைக் கூட பெற்றுக் கொடுக்க முடியாத அரசியல் தலைமைகளால், 13வது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் செல்ல முடியுமென்பது நகைச்சுவையாகும். இந்தியாவின் தலையீடு இல்லாதிருந்திருந்தால், மாகாண சபை கூட கிடைத்திருக்காது. இதுதான் உண்மையான அரசியல் நிலைமை. 13வது திருத்தமும் இல்லையென்றால் அதன் பின்னர் ஈழத் தமிழர்களுக்கு எதுவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசை இழுத்துச் செல்லும் வழக்குகள்! அரசியலை ஆட்டிப் படைக்கும் பட்டங்கள்! மோடி சொன்னாராம்! அநுர கேட்டாராம்!!

பனங்காட்டான்

இலங்கை அரசியல்வாதிகளின் கல்வித் தகைமைகளும் பட்டங்களும், நீதிமன்றங்களில் படியேறும் தமிழரசுக் கட்சியினரின் அலங்கோலங்கள், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் இந்திய விஜயம் என்பவை நிகழ்கால முக்கிய சமாசாரங்கள்.

இவைகளை அலசுவதே இந்த வாரப் பத்தியாக அமைகின்றது. இதன்போது பல பின்னணித் தகவல்களையும் இவைகளின் போக்கு பற்றியும் தெரியக்கூடியதாக இருக்கும்.

அநுர குமாரவின் புதிய அரசாங்கத்தின் சபாநாயகராகப் பதவியேற்ற அசோக ரன்வெல அந்தப் பதவியில் அமர்ந்த வேகத்தைவிட அதிலிருந்து வெளியேற்றப்பட்ட வேகம் றொக்கற் போன்றது. கல்விப் பெறுபேறுகள் ஊடாக பெறமுடியாது போன பட்டத்தை தமது பெயருக்கு முன்னால் சூட்டிக் கொண்டதால் ஏற்பட்ட வினை இப்பதவி நீக்கம் என்று சொல்லப்படுகிறது.

தமது கட்சியின் தலைவரான அநுர குமாரவின் உத்தரவின் பேரில் இவர் சபாநாயகர் பதவியைத் துறந்தார் என செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் இவருக்கு 'நல்ல பிள்ளை' என்ற பெயர் கிடைத்துள்ளது. அதேசமயம் வேறு சில அரசதரப்பு எம்.பிக்களும் அமைச்சர்களும் தமது பெயர்களுக்கு முன்னால் தேர்தல் காலத்தில் செருகிய கலாநிதி (டாக்டர்), பேராசிரியர் (புறொபசர்) போன்ற பட்டங்களை மெதுவாக இணையத் தளங்களிலிருந்து நீக்கி விட்டதாக கிசுகிசு பாணியில் சமூக ஊடகங்கள் நிரம்பி வழிகின்றன.

இவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் கலாநிதி பட்டங்களை கல்லாநிதிப் பட்டங்கள் என்று பொதுவாக பலரும் கிண்டலடிப்பதுண்டு. அதாவது கல்வி கற்காது காசு கொடுத்து பெறப்பட்ட பட்டங்கள் என்பது இதன் அர்த்தம். கடதாசிப் பட்டங்கள் என்றும் இதனை அழைப்பதுண்டு. அமெரிக்கா, ஜப்பான் உட்பட பல நாடுகளில் இயங்கும் சில அமைப்புகள் பணத்தைப் பெற்றுக் கொண்டு இந்தக் கடதாசிப் பட்டங்களை தபாலில் அனுப்பி வைக்கும் பழக்கம் கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக நடைமுறையிலிருந்து வருகிறது.

அமெரிக்க டாலரில் சுமார் 300 வரை பெற்று இந்தக் கடதாசிப் பட்டங்கள் விநியோகிக்கப்படுகின்றன. பட்டம் வழங்கும் அமைப்புக்கு அங்கத்துவப் பணம் என இது சொல்லப்படுகிறது. கனடா, பிரிட்டன் உட்பட பல நாடுகளிலுள்ள அரசியல்வாதிகள் மட்டுமன்றி பத்திரிகை - வானொலி - சஞ்சிகையாளர்களும் எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்களும் பல இந்துமத குருமார்களும் இந்தக் கடதாசிப் பட்டங்களை பிரேம் போட்டு வீடுகளிலும் தங்கள் அலுவலகங்களிலும் தமக்குத் தாமே தலைப்பாகி கட்டி வந்துள்ளனர். தங்கள் லெட்டர் ஹெட்டில் கல்லாநிதிப் பட்டத்தை தடித்த எழுத்தில் போட்டு பெரும் மகிழ்வு மடைகின்றனர்.

அநுர குமார அரசிலுள்ளவர்களின் கடதாசிப் பட்டங்கள் அம்பலமானதால் உலகெங்கும் வாழும் இவ்வகைப் பட்டம் பெற்றவர்கள் இன்று திக்குமுக்காடுகின்றனர். தமிழ்நாட்டில் இவ்வாறு கடதாசிக் கலாநிதிப் பட்டம் பெற்ற அரசியல்வாதி ஒருவர் தமது வீட்டின் முன் சுவரில் ஆங்கிலத்தில் தமது பெயரின் முன்னால் டாக்டர் என்று எழுதியதால் அயலிலுள்ள நோயாளிகள் பலர் அவர் வீட்டின் முன்னால் மருத்துவ தேவைக்காகச் சென்றதால் ஏற்பட்ட களேபரத்தை அந்நாட்டுப் பத்திரிகை ஒன்று



பிரசுரித்து அவரை அவமானப்படுத்தியது.

அநுர குமார ஆட்கள் ஒவ்வொருவரதும் கல்வித் தகைமைகளை முழுமையாக ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் போராடுகின்றன. இதனால் எதிர்க் கட்சியினரில் சிலரும் அகப்பட்டுள்ளனர் போலத் தெரிகிறது. 'விட்டாரையா, பட்டம் விட்டாரையா' என்ற பாடலை இது நினைவூட்டுகிறது.

அடுத்த சமாசாரம், தமிழரசுக் கட்சிக்காரரின் தொடர் வழக்குகள். கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட சுமந்திரன், கிளிநொச்சி சிறீதரனிடம் படுதோல்வி கண்டதையடுத்து வழக்குகள் ஆரம்பமாகின. கட்சியின் புதிய தெரிவுகள், முக்கிய கூட்டங்கள் என்று பல இடைநிறுத்தம் காணும் வகையில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

சு(ம்)மா ஆரம்பித்து வைத்ததாக பரவலாகப் பேசப்படும் இந்த அரசியல் வழக்குகள் இப்போது தனக்குத்தானே சூனியம் வைத்ததுபோல அந்த ஒருவரின் வட்டத்தையே சுற்றி வளைக்குமளவுக்கு வழக்குகள் அதிகரித்து வருகிறது. தலைவரில்லாத தமிழரசுக் கட்சியின் ஆயுட்கால தலைவராக விரும்பும் சிறை மீண்ட செம்மல் மாவை சேனாதிராஜா தள்ளாத வயதில் நீதிமன்றத்தை நாடியுள்ளார். சுமந்திரனின் ஏவலாக இயங்குவதாக

> 13ஆம் திருத்தம் தொடர்பில் இந்தியாவுடன் பேச எதுவுமில்லை. எல்லை நிர்ணயம் நிறைவுபெற்ற பின்னரே மாகாண சபைத் தேர்தல் பற்றி தீர்மானிக்கப்படும். இந்தியாவுக்கான இலங்கையின் பதில் இது.

பொதுவெளியில் அறியப்படும் ப.சத்தியலிங்கத்தின் செயற்பாடுகளை முடக்குவதற்கு அவரது வன்னியின் இன்னோர் அரசியல்வாதியான சிவமோகன் நீதிமன்றத்தை நாடியுள்ளார். எழுபத்தைந்து ஆண்டுகளை பூர்த்தி செய்த தமிழரசுக் கட்சியின் பூரிப்பில் மகிழ்வடையும் கட்சியினர் உள்வீட்டுக்குள் இன்னும் எத்தனை வழக்குகளை சந்திக்கப் போகிறார்களோ தெரியாது. மொத்தத்தில் கட்சியை உடைத்தே தீருவோம் என்று கண்ணிவெடியுடன் நிற்கும் இவர்கள் தான் கட்சியின் தலைவர்களும் தளபதிகளுமாம்.

இந்த நாடகங்களைப் பார்க்கும் போது தமிழீழ தேசிய தலைவர் வே.பிரபாகரன் தமது போராளிகளுக்கு பல முறை தெரிவித்ததாகக் கூறப்படும் ஒரு கதை நினைவுக்கு வருகிறது. அது இது தான்:

"பாம்பைச் சாகடித்தால் அதை அப்படியே விட்டுச் செல்லக்கூடாது. சற்றுக் காற்றுப்பட்டாலும் அது உயிர்த்துவிடும். பாம்பைக் கொலை செய்தால் அதனை எரித்து அதன் சாம்பரை நிலத்தில் புதைக்க வேண்டும்" என்பதே அவரது ஆலோசனை.

> பாம்பைச் சாகடித்தால் அதனை எரித்து சாம்பரை நிலத்தில் புதைக்க வேண்டும். இல்லையேல் கொஞ்சம் காற்றுப்பட்டாலும் அது உயிர்பெற்று எழும்பி விடும். தமிழரசாருக்கான ஆலோசனை இது.

தமிழரசுக் கட்சிக்குள் இருந்து கொண்டே நச்சுவிதைகளைப் பரப்பி கட்சியை அழித்தொழிக்க முனைவோர் யாராக இருந்தாலும் - முக்கியமாக தேர்தலில் வீழ்த்தப்பட்டவர்களை பாம்பின் கதை ஊடாக பார்க்க வேண்டிய காலம் இது. அவர்கள் மீள எழும்ப முடியாது பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதே தேசியத் தலைவரின் கருத்தினூடாக புரிந்து கொள்ளப்பட வேண்டியது.

இப்பத்தியின் மூன்றாவது அம்சம், அநுர குமாரவின் இந்திய விஜயம். ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இவர் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டு விஜயம் இது. இந்தியா அயல்நாடு என்ற வகையில் அயலுறவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வழக்கம் இலங்கையின் முன்னைய அரசத் தலைவர்களிலிருந்து பேணப்பட்டு வரும் நல்லெண்ண முறைமை.

அநுர குமார மாக்சிஸ ஜனாதிபதி என்று அடையாளம் காணப்பட்டாலும், சோசலிஸ - கம்யூனிஸ நாடுகளுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேண வேண்டிய தேவையுள்ளவர். இது கட்டாயமும்கூட. விரைவில் இவர் சீனாவுக்கு பயணம் மேற்கொள்ளவிருப்பதை இதனூடாகக் காணலாம். எனினும், இலங்கைத் தலைவர்கள் தங்களது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்குச் செல்வது ஒரு சடங்காகவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில், இலங்கையின் புதிய அரசுத் தலைவருக்கான வருகை அழைப்பு விடுப்பதை இந்தியா பாரம்பரிய நடைமுறையாக மேற்கொண்டு வருகிறது.

இந்திய ஜனாதிபதியும் அந்நாட்டின் பிரதமரும் அநுர குமாரவை வரவேற்ற பாங்கு, அவரது அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் கைகூப்பியும், கைலாகு கொடுத்தும் மதிப்பளித்த முறைமைகள் சர்வதேச ஊடகங்களில் பிரபலப்படுத்தப்பட்டுள்ளது.

"நீ கேட்பதெல்லாம் நான் தருவேன். நீ கேட்காததும் தருவேன்" என்று கதாநாயகி பாடும் பாடல் ஒன்று தமிழ்ச் சினிமாவில் பிரபலமானது. அந்தப் பாணியில் இலங்கை ஜனாதிபதி கேட்டதையெல்லாம் இந்தியா வழங்க முன் வந்தது, இலங்கையின் தேவையை ஒட்டியல்ல. அது இந்தியாவின் தேவைக்கானது. பத்தோடு பதினொன்றாக இலங்கை - இந்திய 1987ம் ஆண்டு ஒப்பந்தம், அதனூடான மாகாண சபை தேர்தலையும் பிரதமர் மோடி அநுர குமாரவுக்கு நினைவூட்டியுள்ளார். ஆம்! இதனை நினைவூட்டியுள்ளார் என்று தான் குறிப்பிட வேண்டும்.

ஏனெனில், 1987ல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது அதனை ஜே.வி.பி. வன்மையாக எதிர்த்து வன்முறைகளை அவிழ்த்து விட்டு அதில் சன்னதம் கொண்டு ஆடியது. சேகுவேரா என அழைக்கப்பட்ட ஜே.வி.பி.யின் செல்லக்குழந்தையான என்.பி.பி. எனப்படும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அநுர குமாரவுக்கு அன்றைய நினைவுகளை மீட்கச் செய்வதற்கு ஒரே வழி 13ம் திருத்தம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் என்பவற்றைச் சுட்டுவதே பொருத்தமானது என்று மோடி கருதியிருக்கலாம் போலும்.

கடந்த 37 ஆண்டுகளாக இலங்கைத் தலைவர்களைச் சந்திக்கும் ஒவ்வொரு இந்தியத் தலைவரும் அந்நாட்டின் தூதுவர்களும் இதனையே சொல்லி வருகின்றனர். ஆனால், இலங்கைத் தலைவர்கள் இதனையிட்டு எதுவும் அலட்டிக் கொள்வதில்லை. சம்பிரதாய பூர்வமான ஒரு வேண்டுகோள் என்று மட்டும் கருதி எந்த உறுதியையும் கொடுப்பதுமில்லை. இதனை ஒரு அரசியல் சுத்துமாத்தாகவே இரு தரப்பும் மேற்கொண்டு வந்துள்ளன.

இலங்கையின் தமிழ் தேசிய கட்சிகளும் 13ம் திருத்தத்தை மறந்துவிட்டன. பேச்சுக்காக மாகாண சபைத் தேர்தல்களை கேட்டுக் கொள்வார்கள். 75 ஆண்டுகளுக்கு முன்னர் பிரேரித்த சமஷ்டி கோரிக்கையையே கடந்த மாத பொதுத்தேர்தலிலும் இவர்கள் முன்வைத்திருந்தனர். கிடைக்க முடியாத கோரிக்கையை முன்வைத்தால் மட்டுமே தொடர்ந்து ஆதாய அரசியலை மேற்கொள்ள முடியுமென்பது தமிழ்த் தேசிய தரப்பினருக்கு நன்கு தெரியும். இந்தியா 13ஆம் திருத்தத்தையும் மாகாண சபைத் தேர்தலையும் ஆத்மசுத்தியவாகவன்றி அரசியலுக்காகவே கேட்பது இலங்கைக்குத் தெரியாததல்ல.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஒரு தடவை தமிழர் தரப்பினரை சந்தித்தபோது, இருப்பதை வைத்துக் கொண்டு செயல்படப் பாருங்கள். இல்லாதவற்றைக் கேட்பதில் நேரத்தைச் செலவிட வேண்டாமென்று கூறியதை இங்கு நினைவுபடுத்த வேண்டும்.

இந்திய விஜயத்தின்போது 13ம் திருத்தம் பற்றியும் மாகாண சபைத் தேர்தல் பற்றியும் அநுர குமாரவிடம் மோடி விடுத்த வேண்டுகோளை அநுர குமார தரப்பு எவ்வாறு பார்த்துள்ளது என்பதை இவரது அரசின் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்:

- 13வது திருத்தம் இலங்கை அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அது குறித்து இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை இருக்கவில்லை. (13வது திருத்தம் அரசியலமைப்பில் இருப்பதால் இந்தியா பேசக்கூடாது என்பது இதன் அர்த்தம்).
- மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணய சிக்கல் இருப்பதால் புதிய எல்லைகள் நிர்ணயித்துச் செல்வது தொடர்பில் நாடாளுமன்றத்தில் இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டும். அதன் பின்னர் மாகாண சபை தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும். (எல்லாமே தீர்மானமாக இருக்க வேண்டுமென்றால் மாகாண சபைக்கான தேர்தல் நடத்துவதற்கு முன்னர் அடுத்த பொதுத்தேர்தல் வந்துவிடும். எனவே மாகாண சபைத் தேர்தலுக்கு உத்தரவாதம் இல்லை).

அநுர குமாரவின் இந்திய விஜயத்தின் பலாபலன் - பிரதமர் மோடி சொன்னாராம், ஜனாதிபதி அநுர குமார அதனைக் கேட்டாராம் என்பதுவே. உனக்கும் பெப்பே, உனது அப்பனுக்கும் பெப்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலுக்கு எதிரான அரசாங்கத்தின் நிகழ்ச்சித் திட்டம் உத்வேகம் பெறுகிறது



கலாநிதி ஜெகான் பெரேரா

பொறுப்புக்கூறும் கடப்பாடுடைய அரசாங்கத்துக்காக மக்கள் அளித்த ஆணை அருகித் தேய்ந்து போவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அனுமதிக்கப் போவதில்லை என்று பாராளுமன்ற சபாநாயகர் பதவியை துறந்த பின்புலத்தில் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க செய்த அறிவிப்பு தேசிய மக்கள் சக்தியை அதிகாரத்துக்கு கொண்டுவந்த தேர்தல்களின்போது மக்களுக்கு அளித்த வாக்குறுதியின் தடத்தில் அமைந்திருக்கிறது. மக்கள் தங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை பேணிக் காப்பதில் உள்ள உறுதிப்பாட்டை மீள வலியுறுத்தியிருக்கும் ஜனாதிபதி எந்த தரத்தில் இருப்பவர்களாக இருந் தாலும் தவறிழைப்பவர்களுக்கு எதிராக தனது அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கையை எடுத்தே தீரும் என்று தெரி வித்ததுடன் மக்களின் ஆணையைப் போற்றி மதித்து சகல மட்டங்களிலும் பொறுப்புக்கூறலை உறுதிப்டுத்தும் அரசாங்கத்தின் குறிக்கோளை அழுத்திக் கூறியிருக்கிறார்.

இது அரசாங்கம் அதன் ஊழல் எதிர்ப்புத் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பதில் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டின் ஓர் அறிகுறியாகும். மக்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு இருக்கும் ஆதரவுத் தளத்தை தொடர்ந்து பாதுகாப்பதற்கு இந்த நிகழ்ச்சித் திட்டம் உதவும். அதிகாரத்துக்கு மீண்டும் வருவதற்காக எந்த மட்டத்துக்கும் கீழிறங்கக்கூடிய அரசியல் எதிரிகளை சட்டரீதியாகவும் நியாயமான முறையிலும் வலுவிழக்கச் செய்வதற்கு அல்லது இயங்க இயலாமல் செய்வதற்கு ஒரு வாய்ப்பையும் இது வழங்கும். அரசியல் எதிரிகள் முன்னர் ஊழலில் ஈடுபட்டவர்கள் என்பதை நிரூபிக்க முடியுமானால் இது சாத்தியமாகும்.

ஊழல் பிரச்சினையை கையாளுவது வேறு வழிகளிலும் கூட அரசாங்கத்துக்கு அனுகூலமாக அமையும். அது நாட்டில் வர்த்தகத்துறைக்கு அனுகூலமான பருவநிலையை மேம்படுத்துவதன் மூலமாக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பெருமளவுக்கு கவர்ச்சியான நாடாக இலங்கையை மாற்றும். பதவியில் இருந்த அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட வரிவிடுமுறை உட்பட மருட்சியான நடவடிக்கைகளினால் கவரப்படாதவர்களாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இருந்து வருகிறார்கள்.

ஊழலில் ஈடுபட்டதாகக் கூறி உலகளாவிய மட்டத்தில் 14 பேருக்கு எதிராக தடைகளை விதிப்பதற்கு அமெரிக்க அரசாங்கம் அண்மையில் தீர்மானித்தது. அவர்களில் ஊழல்தனமான அரசாங்க கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டமைக்காக இரு இலங்கையர்களும் உள்ளடக்கப்பட்டிருப்பது முக்கியமான ஒரு விடயமாகும். அரசாங்கத்தை அன்றி பிரத்தியேகமாக தனிநபர்களை இலக்கு வைத்து விதிக்கப்பட்டிருக்கும் தடைகள் அமெரிக்கா இலங்கை தலைமைத்துவத்துக்கு எதிராக செயற்படவில்லை, மாறாக நீதி மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பான கோட்பாடுகளை கடைப்பிடிப்பதில் பற்றுறுதி கொண்டிருக்கிறது என்பதை சமிக்ஞை காட்டுகின்றன. ஊழலில் ஈடுபட்டதாக கூறப்படும் இந்த தனிநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதன் மூலம் இலங்கை அரசாங்கம் அதன் நிறுவனங்களை தூய்மைப்படுத்துவதற்கு கொண்டிருக்கும் ஆணையை அமெரிக்கா மறைமுகமாக வலுப்படுத்துகிறது.

இறுதியாக 2020 ஆம் ஆண்டில் உலக வங்கியினால் வெளியிடப்பட்ட இலகுவான வர்த்தகச் செயல்பாட்டு சுட்டெண் அறிக்கையில் 190 நாடுகளின் மத்தியில் இலங்கை 99 வது இடத்தில் இருந்தது. (அந்த சுட்டெண் அறிக்கையை வெளியிடுவதை உலக வங்கி அந்த ஆண்டுடன் நிறுத்திவிட்டது) அரசாங்க நிருவாகத்திலும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் போன்ற அமைப்புகளிலும் நிலவும் பரவலான ஊழல் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதில் தாமதம் அல்லது உத்தியோகபூர்வமற்ற கொடுப்பனவுகளுக்காக அதிகாரிகளிடமிருந்து வரும் கோரிக்கைகள் காரணமாக முதலீடுகளைச் செய்வதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தயங்கினார்கள்.

ஒரே இடத்திலேயே சேவைகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் மற்றும் எண்மமயப்படுத்தல் மூலமாக செயன்முறைகளை ஒழுங்கமைப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், ஊழல் ஒழிக்கப்படுவதை காட்டிலும் அது பெருமளவுக்கு நுணுக்கமான முறைகளில் தொடருவதையே காணக்கூடியதாக இருந்தது. சமூகமுறைமை முழுமைக்குள்ளும் ஊடுருவிவிட்ட ஊழலை வெற்றிகொள்வதற்கும் ஊழல்தனமான முன்னைய அரசாங்கத் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் துரித பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான முதலீட்டு பருவநிலையை மேம்படுத்துவதற்கும் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க சர்வதேச சமூகம் தயாராயிருக்கிறது போன்று தோன்றுகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைக்கு தேசிய மக்கள் சக்தி காட்டிய எதிர்ப்பு இன்னொரு பொருளாதார வீழ்ச்சிக்குள் நாட்டை மூழ்கடித்துவிடக்கூடிய ஆபத்தை தோற்றுவிக்கும் என்று ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக விமர்சகர்கள் வாதாடினார்கள். இலங்கை நாணயத்தின் மதிப்பிறக்கம், எரிபொருட்களுக்கு தட்டுப்பாடுக்கான சாத்தியம் மற்றும் 2020 -2022 காலப்பகுதியில் நிலவிய இடர்மிகு சூழ்நிலை மீண்டும் தோன்றக்கூடிய ஆபத்து ஆகியவற்றின் அடிப்படையிலேயே அந்த அச்சம் அமைந்தது. பொருளாதார காரணங்களுக்காக கொண்டு ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக பெரியளவில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்திக்குள் இருக்கும் பழைய மார்க்சிய சிந்தனை கொண்டவர்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை நிராகரிப்பதன் மூலம் இன்னொரு பொருளாதார வீழ்ச்சியை நோக்கி நாட்டைக் கொண்டுசென்று விடுவார்கள் என்று கடுமையான பிரசாரம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இலங்கை நாணயத்தின் பெறுமதி மீண்டும் ஒரு தாழ்ந்த மட்டத்துக்கு செல்லும் என்றும் பெட்ரோல் நிலையங்களுக்கு வெளியே மக்கள் நீண்ட வரிசைகளில் காத்துநிற்கும் நிலை ஏற்படும் என்றும் மூன்று வருடங்களுக்கு முன்னர் நாடு கண்டதைப் போன்று அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்றும் விமர்சகர்கள் எச்சரிக்கை செய்தார்கள். சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைக்கு மாற்றீடாக உருப்படியான மாற்றுத் திட்டம் தேசிய மக்கள் சக்தியிடம் இல்லாத நிலையிலும் கூட அதை நிராகரிப்பது குறித்து ஆராயப்பட்டுகிறது என்ற அடிப்படையிலேயே அந்த எச்சரிக்கைக்கு நியாயம் கற்பிக்கப்பட்டது.

> அரசாங்கம் அதன் ஊழல் எதிர்ப்பு மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டு ஆணையை உறுதியாகப் பின்பற்றுவதன் முலமாக அதன் நம்பகத்தன்மையை தொடர்ந்து பேணிப் பாதுகாக்கின்றது.

உண்மையில், ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களின் தொடக்கத்தில் (ஏனைய எதிர்க்கட்சி சகாக்களுடன் சேர்ந்து) தேசிய மக்கள் சக்தி முன்னாள் ஜனாதிபதியின் மேற்பார்வையின் கீழ் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு செய்து கொள்ளப்பட்ட சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை கடுமையாக விமர்சித்தது. உழைக்கும் மக்களின் நலன்களுக்கும் தேசிய நலன்களுக்கும் அந்த உடன்படிக்கை பாதகமானது என்று காரணமும் கூறப்பட்டது. ஆனால், தேர்தல்களுக்கு சற்று முன்னதாக தேசிய மக்கள் சக்தி அதன் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டது.

சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையின் அடிப்படைக் கட்டமைப்பை ஏற்றுக்கொள்கின்ற அளவுக்கு தேசிய மக்கள் சக்தியின் அந்த புதிய நிலைப்பாடு அமைந்தது. முழு அளவில் இல்லை என்றாலும், உடன்படிக்கையை புதிய அரசாங்கம் பின்பற்றுகிறது. உதாரணமாக கூறுவதென்றால், அரச நிறுவனங்களை ஒட்டுமொத்தமாக தனியார் மயமாக்குவதையும் அரச கல்வி மற்றும் சுகாதார முறைமையை மலினப்படுத்துவதையும் தேசிய மக்கள் சக்தி இணங்கிக் கொள்ளவில்லை. முன்னைய அரசாங்கம் தொடர்ந்தும் பதவியில் இருந்திருந்தால் அவையெல்லாம் நடந்தேறியிருக்கும். இப்போது தனியார் - அரசாங்க கூட்டுப் பங்காண்மை குறித்து பேசப்படுகிறது. நாளடைவில் பொருளாதார உறுதிப்பாடு குறித்து புதிய அரசாங்கம் நம்பிக்கையை பெறுமானால் மேலும் கூடுதலான புத்தாக்க முயற்சிகளுக்கு வாய்ப்பு ஏற்படலாம்.

தனியார் சர்வதேச பிணை முறியாளர்களுடன் அரசாங்கம் கண்டிருக்கும் இணக்கப்பாடு சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையினால் வகுக்கப்பட்ட பொருளாதாரப் பாதையில் தொடர்ந்து பயணிப்பதிலும் சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற கடன் வழங்கும் நாடுகள் உட்பட பரந்தளவில் சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைப்பதிலும் அரசாங்கம் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. தற்போது அரசாங்கம் அதன் சர்வதேச பிணைமுறிகளை மறுசீரமைப்பதற்கு தனியார் கடன் வழங்குனர்களிடம் இருந்து ஆதரவைப் பெற்றிருக்கிறது. இலங்கையின் 12.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பிணைமுறிகளில் 98 சதவீதத்துக்கும் நெருக்கமானவற்றை பிரதிநிதித்துவம் செய்யும் முதலீட்டாளர்கள் தங்களது கடனீட்டுப் பத்திரங்களை புதிய சீட்டுக்களுக்கு மாற்றிக் கொள்வதற்கு இணங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறாக பரந்தளவில் கிடைத்திருக்கும் ஆதரவு வருட இறுதிக்கு முன்னதாக கடன் மறுசீரமைப்பை பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்பை உருவாக்கும். தனியார் கடன் வழங்குனர்களுடனான கடனை மறுசீரமைப்பது சரவதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையின் கீழான ஒரு அவசியமான நடவடிக்கையாகும். ஒரு சிறிய வகிபாகத்தைக் கொண்டிருந்தாலும், இலங்கை இன்று சஞ்சரிக்கும் பொருளாதார உலகில் இதுவே சிறந்த தெரிவாக இருக்கும் என்று தோன்றுகிறது.


பல்வேறு செலவினங்களை சமாளிப்பதற்கு பணம் இல்லாமல் இருப்பது தற்போதைய தருணத்தில் அரசாங்கம் எதிர்நோக்கும் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அண்மைய வெள்ளப் பெருக்கு, அரிசி, தேங்காய் தட்டுப்பாட்டுக்கு அரசாங்கம் காரணமல்ல. அத்துடன் அரசாங்கம் எதிர்நோக்கும் நிதி நிர்ப்பந்த நிலையின் விளைவாக இது விடயத்தில் அது எதையும் பெரிதாக செய்துவிடவும் முடியாது. ஆனால், தனியார் பிணைமுறியாளர்களின் ஒத்துழைப்பை பெற்றதன் மூலமாக சிக்கலான பேச்சுவார்த்தைகளை கையாளுவதில் தனக்கு இருக்கும் ஆற்றலை அரசாங்கம் நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

தனியார் கடன் வழங்குனர்களுடனான வெற்றிகரமான பேச்சுவார்த்தை உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு நேர்மறையான சமிக்ஞையைக் காட்டி இலங்கையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தியிருக்கிறது. எதிர்காலத்தில் முதலீடுகளைப் பெறக்கூடிய வாய்ப்பான ஒரு நிலையில் இலங்கை இருக்கிறது. இதன் மூலம் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தேர்தல் பிரசார காலத்திலும் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு துரோகம் இழைத்து விட்டதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கின்ற விமர்சனங்களை அரசாங்கம் மறுதலிக்க முடியும்.

அரசாங்கம் மக்களிடம் கேட்ட ஆணை 231 பக்கங்களைக் கொண்ட ஒரு விஞ்ஞாபனத்தில் உள்ளடங்கியிருக்கிறது. கலைகள், கலாசாரம் தொடக்கம் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி வரை பரந்தளவில் பெருவாரியான விடயங்களில் வாக்குறுதி வழங்கப்பட்டிருக்கிறது. வாக்குறுதியின் மையப்பொருள் தற்போதைய ஊழல்தனமான முறைமையை மாற்றியமைப்பதும் சட்டத்தின் ஆட்சி மதிக்கப்படுவதை உறுதி செய்வதுமேயாகும்.

இவையே 2022 ஆம் ஆண்டில் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் மக்கள் சக்தியின் வீதிப்போராட்டங்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் இந்தியப் பயணம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்!





கந்தையா அருந்தவபாலன்

இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசநாயக தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு சென்று, அந்நாட்டின் பிரதமர் உட்பட முக்கிய தலைவர்களுடன் இருதரப்பு நலன்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதுடன், இரு அரசுகளுக்கிடையிலான உடன்படிக்கைகள் இரண்டும் கைச்சாத்திடப்பட்டுள்ளன. பொதுவாக இருநாட்டு அரசுத்தலைவர்களுக்கிடையிலான இவ்வாறான சந்திப்புகளின்போது தத்தமது நாடுகளின் நலன்கள் தொடர்பான அக்கறைகளுக்கு முக்கியத்துவமளிக்கப்படுவதுடன் அவையே அந்நாடுகளின் பிரதான எதிர்பார்ப்புகளாகவும் அமையும். எனினும் இலங்கை ஜனாதிபதி ஒருவர் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளும்போதும்சரி அதேபோல இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும்போதும்சரி இருநாட்டுத் தலைவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மேலாக இன்னொரு தரப்பாக இலங்கைத் தமிழர்களும் தனியான சில எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பதும் வழக்கமானதொன்றாக மாறிவிட்டது. அந்தவகையில் அனுரவின் இந்தப் பயணத்தின்போதும் தமிழர்தரப்பு தமது பிரதான பிரச்சினைகளுக்கு ஏதாவது தீர்வுகள் அல்லது தீர்வுக்கான சமிக்ஞைகள் கிடைக்குமென வழமைபோலவே எதிர்பார்த்திருந்தனர். அவர்களின் எதிர்பார்ப்பில் இரண்டு விடயங்கள் முக்கியம் பெற்றிருந்தன. ஒன்று தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றியது. இரண்டாவது மீனவர்கள் அனுபவித்துவரும் பிரச்சினைக்கான தீர்வு பற்றியது. அரசியல் தீர்வு தொடர்பாக அண்மையில் தமிரசுக்கட்சியின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான இந்திய தூதுவரைச் சந்தித்து இதுதொடர்பாக கதைந்திருந்துடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பியிருந்ததும் இந்த எதிர்பார்பபை அதிகரித்திருந்தது. இந்த நிலையில் அரச தலைவர்களின் இச்சந்திப்பின்போது தமிழ் மக்களின் இவ்விரு விடயங்கள் தொடர்பான எதிர்பார்ப்புகளுக்கு கிடைத்த பயன்கள் எவை?

இரு அரச தலைவர்களுக்கிடையிலான சந்திப்பு பரஸ்பர உறவுகள் சார்ந்தது என வெளியில் சொல்லப்பட்டாலும் அதில் தன்னலம் சார்ந்த அரசியல், பொருளாதார அணுகுமுறையே அதிகம் மேலோங்கி இருக்கும். ஒவ்வொரு தரப்பும் மறுதரப்பை எவ்வாறு தனது நாட்டு நலனுக்கு ஏற்றவகையில் கையாள்வது என்பதில் குறியாக இருக்கும். பெயரளவில் அரச உறவுகள் என்றாலும் அதில் வர்த்தக அணுகுமுறை மனப்பாங்கு காணப்படும். அதிலும் சிறிய, பெரிய நாடுகளாயின் ஊடகங்களுக்கு சமத்துவ நண்பர்களாக தோளில் கைபோட்டுக் காட்டிக் கொண்டாலும் பெரியநாட்டின் கோரிக்கைகளில் ஒருவகை அழுத்தங்களும் பிரதிபலிக்கும். அத்துடன் சிறிய மீனைக் கொடுத்து பெரிய மீனைப் பிடிக்கும் உத்திகளும் தாராளமாக இருக்கும். ஒருவகையில் இவ்வகைப்பட்டதே இலங்கை இந்திய உறவு. ஆழமாகப்பார்த்தால் இந்தச் சந்திப்பினூடாக இந்தியா அடைந்து கொண்டதே அதிகம்.

ஏலவே நல்லாட்சிக்காலத்திலும் பின்னர் ஜனாதிபதிக்காலத்திலும் ரணிலுடன் இணக்கம் காணப்பட்ட விடயங்களும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட விடயங்களும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் தொடருமா என்ற ஒரு ஐயம் நிலவியது. ஏனெனில் தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தி இவ்வாறான உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்படும் அல்லது மீளாய்வு செய்யப்படும் என்று கூறியே ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் அவ்வாறு இல்லாது அவை எல்லாவற்றுக்கும் இச்சந்திப்பின்போது அனுரவால் பச்சைக் கொடி காட்டப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. இரட்டை வரிவிதிப்புத் தவிர்ப்பு உடன்பாடு, மின்னுற்பத்தி வலையமைப்பு, இந்தியாவுக்கும் திருகோணமலைக்கும் இடையில் பெற்றோலிய குழாய்க் கட்டமைப்பு, ஆய்வுக்கப்பல்களை கண்காணிப்பதற்கான ஒழுங்கமைப்பு, வீடமைப்பு, விவசாயம், பண்ணைமுயற்சிகள், மீன்பிடி போன்ற பலதுறைகளில் இந்திய முதலீடுகளுக்கான வாய்ப்பு என பல விடயங்களில் இருநாடுகளின் தலைவர்களுக்குமிடையில் உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. இதேவேளை இலங்கை நிர்வாகிகளுக்குப் பயிற்சி வழங்கல், மாகோ - அனுராதபுரம் வரையில் அமைக்கப்பட்ட புகையிரதக் கட்டுமானத்துக்கான கொடுப்பனவைக் கொடையாக மாற்றுதல், காங்கேசன்துறை இறங்குதுறைப் புனரமைப்பு, சில துறைகளை டிஜிட்டல் மயமாக்குதல்போன்ற சில உதவித்திட்டங்கள் இந்திய அரசினால் இலங்கைக்கு வழங்கப்படும். இவையே இரு அரச தலைவர்களின் பேச்சுவார்த்தைகளில் முக்கியமாக இணக்கம் காணப்பட்ட விடயங்களாக உள்ளன.

இதேவேளை தமிழ் மக்கள் எதிர்பார்த்த விடயங்களான அரசியல் தீர்வு, மீனவர் பிரச்சினை தொடர்பாக இரு தலைவவர்களிடமிருந்தும் உறுதியான நிலைப்பாடுகள் எவையும் வெளிப்படுத்தப்பட்டதாகவோ இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவோ செய்திகளில்லை. தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் உச்ச நிலைப்பாடு 13ஆவது திருத்தச் சட்டம்தான். ஆனால் அதுபற்றி இருதலைவர்களும் பேசியதாகவோ அல்லது இந்தியப் பிரதமர் அதனை வலியுறுத்தியதாகவோ செய்திகளில்லை. இந்திய ஊடகங்களின் செய்திகளின்படி இரு தலைவ்ர்களின் கலந்துரையாடலில் இந்த விடயத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை என்றே அறியமுடிகிறது. இரு தலைவர்களதும் கூட்டு ஊடக சந்திப்பின்போது இந்தியப் பிரதமர் தனது உரையில் இலங்கையின் அரசியல் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படுமென்றும் மாகாணசபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்திருந்தாலும் அனுரவின் உரையில் அதுபற்றி எதுவுமில்லை. அதுமட்டுமன்றி இச்சந்திப்பில் இருவரும் பேசிய விடயங்களை அவர்கள் தங்கள் தங்கள் ஓதளப்பதிவுகளில் விரிவாகச் சுட்டிக் காட்டியிருந்தபோதும் அவை எவற்றிலும் பேசப்பட்ட விடயமாக தமிழ் மக்களது பிரச்சினை உள்ளடக்கப்படவில்லை என்பது அது பேச்சுவார்த்தையில் முக்கியமான ஒன்றாக இருந்திருக்கவில்லை எனக் கொள்ள முடியும். மாகாண சபைக்குத் தேர்தல்கள் நடத்தப்படும் என்பது இவர்களின் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட முடிவல்ல. அனுரவின் இந்தியப் பயணத்துக்கு முன்னதாகவே எதிர்க் கட்சிகளையும் இந்தியாவையும் சமாளிப்பதற்காக அனுர அரசாங்கத்தினால் இராஜதந்திர நோக்கில் அறிவிக்கப்பட்டுவிட்ட ஒன்றாகவே அது நோக்கப்பட வேண்டும்.

மறுபுறத்தில் இந்தியப் பிரதமருடனான பேச்சுவார்த்தையின்போது

> **புதிய அரசியலமைப்பு அநுரவின் ஆட்சிக்காலத்தின் இறுதியில் கொண்டுவரப்படும். அதில் தமிழ் மக்களின் கோரிக்கையின் மிகக் குறைந்தபட்ச திருப்திப்படுத்தலாக தற்போது இருக்கின்ற மாகாணசபை முறைமையும் இல்லாமல் போகும். அதனையே வழமையாக இறுதிக்காலத்தில் ஆட்சியாளர் மீது சிங்கள மக்களுக்கு ஏற்படவுள்ள ஒட்டுமொத்த வெறுப்பையும் வெற்றி கொள்வதற்கான பிரதான கருவியாகப் பயன்படுத்தி தேசிய மக்கள் சக்தி அடுத்த தேர்தலில் களமிறங்கும் என எதிர்பார்க்க முடியும்.**

இலங்கை மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அனுர தரப்பு கூடிய முக்கியமளித்துள்ளமை புலப்படுகிறது. குறிப்பாகக் கடல் மற்றும் கண்டமேடைகள் தொடர்பான சர்வதேச எல்லை வரையறைகளின் அடிப்படையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பது பேச்சுவார்த்தைகளில் இலங்கைத் தரப்பின் உறுதியான நிலைப்பாடாக இருந்துள்ளது. எனினும் இப்பிரச்சினையை மனிதாபிமான ரீதியில் அணுகவேண்டும் என்பது இந்தியதரப்பின் நிலைப்பாடாக உள்ளது என்பதை இந்தியப் பிரதமரின் பேச்சு வெளிப்படுத்தியுள்ளது. இலங்கையின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் அது தமிழக மீனவர்களுக்கு மட்டுமல்ல ப.ஜ.கவின் தமிழக அரசியலுக்கும் பாதகமாக அமையும். இவ்வாறானதொரு முரண்நிலையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இலகுவானதொன்றல்ல. எனவே அப்பிரச்சினை தொடர்பாக வழமைபோல எதிர்காலத்திலும் பேச்சுவார்த்தைகள் தொடரும். அதேபோல தமிழக மீனவர்களின் அத்துமீறல்களும் கைதுகளும் போராட்டங்களும் எதிர்காலத்திலும் தொடருமேயொழிய நிரந்தரத் தீர்வுக்கான வாய்ப்பு இல்லை.

தமிழ் மக்களின் இவ்விரு எதிர்பார்ப்புகள் தொடர்பாக இரு தலைவர்களின் பேச்சுவார்த்தையின்போது ஒத்த தன்மையொன்றை அவதானிக்க முடிகிறது. அரசியல் தீர்வு தொடர்பான இந்திய தரப்பின் கோரிக்கைகளுக்கு அனுர தரப்பிலிருந்து தெளிவான வெளிப்பாடுகள் எதுவும் இல்லாதது போலவே மீனவர் பிரச்சினை தொடர்பான இலங்கை தரப்பின் கோரிக்கைகளுக்கு இந்திய தரப்பிலிருந்து தெளிவான வெளிப்படுத்தல்கள் எதுவும் இருக்கவில்லை. இருதரப்பு பேச்சுகளில் வர்த்தகம், முதலீடுகள், கட்டுமானங்கள், ஒத்துழைப்புகள், உதவிகள் போன்றவை தொடர்பான விடயங்களில் உடன்பாடு, முன்னேற்றம், அடுத்தகட்ட நகர்வு என நேர்மறையான போக்குத் தென்படுவதுபோல தமிழ் மக்கள் எதிர்பார்த்த விடயங்களில் எதுவும் அமையவில்லை. அண்மிய எதிர்காலத்தில் அதற்கான வாய்ப்புகள் இருப்பது போலவும் தெரியவில்லை. அந்தவகையில் அனுரவின் இந்தியப் பயணம் தொடர்பில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தையே தந்துள்ளன.

அனுர அரசாங்கத்தைப் பொறுத்தவரை எதிர்க்கட்சிகளோ அன்றி தமிழர்தரப்போ அதற்குச் சவாலாக இப்போது இல்லை. நாட்டின் பொருளாதாரமே பாரிய சவாலாக உள்ளது. அத்துடன் அந்தச் சவாலை வெற்றி கொள்வதிலேயே அதன் உறுதியான இருப்பும் தங்கியுள்ளது. அந்தச் சவாலை வெற்றி கொள்ளும் பாதையில் ஒருகாலில் சர்வதேச நாணய நிதியத்தின் விலங்குடனும் மறுகாலில் இந்தியாவின் விலங்குடனுமே அரசாங்கம் பயணிக்க வேண்டியுள்ளது என்பது கசப்பான உண்மை. அந்த விலங்குகளை உடைத்துவிட்டு இப்போது பயணிக்க முடியாதென்பது அனுரவுக்கும் தெரியும். அதனால்தான் தேர்தல்காலத்தில் வீராப்பாகப் பேசிய எதனையும் அதனால் நிறைவேற்ற முடியாதிருப்பது மட்டுமன்றி முன்னர் கூறியவற்றுக்கு மாறாக இப்போது அவற்றை நியாயப்படுத்தும் தேவையும் எழுந்துள்ளது. அந்தவகையில்தான் புதிய அரசியலமைப்பினூடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்பதுவும் அமையும். புதிய அரசியலமைப்பு அனுரவின் ஆட்சிக்காலத்தின் இறுதியில் கொண்டுவரப்படும். அதில் தமிழ் மக்களின் கோரிக்கையின் மிகக் குறைந்தபட்ச திருப்திப்படுத்தலாக தற்போது இருக்கின்ற மாகாணசபை முறைமையும் இல்லாமல் போகும். அதனையே வழமையாக இறுதிக்காலத்தில் ஆட்சியாளர் மீது சிங்கள மக்களுக்கு ஏற்படவுள்ள ஒட்டுமொத்த வெறுப்பையும் வெற்றி கொள்வதற்கான பிரதான கருவியாகப் பயன்படுத்தி தேசிய மக்கள் சக்தி அடுத்த தேர்தலில் களமிறங்கும் என எதிர்பார்க்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை ஏற்படுத்தும் நட்புறவு!

மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்திருந்தார் இலங்கை அதிபர் அநுரகுமார திசாநாயக. இலங்கையின் புதிய அதிபர் குடியரசுத் தலைவர் மாளிகையில் அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்கப்பட்டிருக்கிறார். மாலத்தீவு அதிபர் மூயிஸ் போலல்லாமல், தனது முதலாவது அரசுமுறைப் பயணத்துக்கு புது தில்லியைத் தேர்ந்தெடுத்திருப்பதிலிருந்து, எந்த அளவுக்கு இந்திய-இலங்கை உறவுக்கு அதிபர் அநுரகுமார முன்னுரிமையும், முக்கியத்துவமும் அளிக்கிறார் என்பது வெளிப்படுகிறது.

பிரதமர் நரேந்திர மோடி உடனான அவரது சந்திப்பு இரு நாடுகளுக்கிடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதாக அமைகிறது. இலங்கையின் வளமான எதிர்காலம், நீடித்த பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இந்தியா தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என்கிற உறுதி பிரதமர் நரேந்திர மோடியால் இலங்கை அதிபருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பிராந்தியத்தின் நிலைத்தன்மைக்கு எந்த வகையிலும் தீங்கு ஏற்பட இலங்கையைப் பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம் என்கிற உறுதியை அதிபர் அநுரகுமாரவும் வழங்கியிருக்கிறார்.

கடந்த 2022ஆம் ஆண்டு இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது இந்தியா ஆதரவுக் கரம் நீட்டியதை நினைவுகூர்ந்த அதிபர் அநுரகுமார, இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் இரு நாடுகளுக்கும் உள்ள பொதுவான சவால்கள் குறித்தும் இந்தியப் பிரதமருடன் கலந்தாலோசனை நடத்தியிருக்கிறார்.

அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்திருக்கும் இலங்கை அதிபரின் கவனத்துக்கு இந்தியா சில பிரச்னைகளைக் கொண்டுவர மறக்கவில்லை. இலங்கையின் மலையகத் தமிழர்கள், கிழக்கு மாகாணத்துக்கான திட்டங்களை நிறைவேற்ற இந்தியா முழு ஆதரவு அளிக்கும் அதேவேளையில், மாகாணத் தேர்தல்களை நடத்தி இலங்கைத் தமிழர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வற்புறுத்தியிருக்கிறது.

நாகப்பட்டினத்திலிருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கியிருப்பது போல, இலங்கையின் தலைமன்னாரையும் ராமேசுவரத்தையும் விரைவில் கப்பல் போக்குவரத்து மூலம் இணைப்பது குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் பேசியிருக்கிறார்கள்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நீண்டகாலமாகவே முடிவு காணப்படாமல் தொடர்கிறது மீனவர் பிரச்னை. இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதும் மீனவர்களும், படகுகளும் சிறை பிடித்து வைக்கப்படுவதும் வழக்கமாகவே இருந்து வருகிறது. முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருப்பதுபோல மனிதநேயம், அமைதியான சூழல், மோதல் போக்கைத் தவிர்ப்பது ஆகியவற்றின் அடிப்படையில் பிரச்னைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

> சுருக்குமடி வலைகள் மூலம் தமிழக மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைப் பகுதியில் நுழைந்து மீன்களை அள்ளிக்கொண்டு செல்வதும், இலங்கை மீனவர்களின் வலைகள் இழுவைப் படகுகளால் சேதம் அடைவதும் அவர்களுக்கு ஆத்திரமூட்டியதில் வியப்பில்லை. - தினமணி

இலங்கைக் கடற்படையின் கடுமையான நடவடிக்கைகளும், தமிழக மீனவர்கள் அடிக்கடி தாக்கப்படுவதும், சுட்டுக் கொல்லப்படுவதும் தொடர்கதையாகவே மாறியிருக்கின்றன. அதே நேரத்தில், இந்தப் பிரச்னைக்கு இந்திய மீனவர்களும் காரணம் என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

பல நூற்றாண்டுகளாக இனத்தாலும், மொழியாலும், மதத்தாலும் இணைந்து வாழ்ந்த தமிழக-இலங்கை மீனவர்களின் உறவில் பிளவு ஏற்படுவதற்கு மீன்பிடி சுருக்குமடி வலைகள் காரணமாக அமைந்தன. இலங்கையின் வடக்குப் பகுதியில் வாழும் தமிழ் மீனவர்களின் முக்கியமான தொழில் மீன்பிடித்தல். இலங்கையின் மொத்த மீன் தேவையில் மூன்றில் ஒரு பங்கு வடபகுதியில்தான் கிடைக்கிறது. உள்நாட்டுப் போர்க் காலத்தில் மீன்பிடித்தல் முற்றிலுமாக நடைபெறவில்லை என்றே கூறலாம்.

பாக் ஜலசந்தி பகுதியில் மீன் பிடிப்பது இலங்கை அரசால் தடை செய்யப்பட்டிருந்தது. இலங்கை மீனவர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வருவதும், இந்திய இழுவைப் படகுகளில் பணியாற்றுவதும் தவிர்க்க முடியாதவையாக இருந்தன. 2009-இல் உள்நாட்டுப் போர் நிறைவுபெற்று, அவர்கள் மீண்டும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டபோது இந்திய மீனவர்களும், அவர்களது இழுவைப் படகுகளும், சுருக்குமடி வலைகளும் மிகப் பெரிய அச்சுறுத்தலாக மாறின.

சுருக்குமடி வலைகள் மூலம் தமிழக மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைப் பகுதியில் நுழைந்து மீன்களை அள்ளிக்கொண்டு செல்வதும், இலங்கை மீனவர்களின் வலைகள் இழுவைப் படகுகளால் சேதம் அடைவதும் அவர்களுக்கு ஆத்திரமூட்டியதில் வியப்பில்லை. தென்சீனக் கடலில் மீன் பிடிக்கும் சீனாவுக்கு எதிராக பிலிப்பின்ஸ் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்ததைப்போல, இந்தியாவுக்கு எதிராக இலங்கை களமிறங்கவில்லை என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். (14ஆம் பக்கம் பார்க்க)

---




# வியுக்தியார் பதில்கள்

**சபா. கதிர்,**
**குருமணக்காடு, வவுனியா.**

**கேள்வி:** இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப. சத்தியலிங்கத்துக்கு எதிராக கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிவமோகன் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாப்பை மீறி, செயலாளர் செயற்படமுடியாது என்பதனால், கட்சியின் மத்திய குழுவில் இருந்து யாரையும் நீக்க முடியாது எனவும், அதற்கான நீதியை பெறவே, யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளாரே. கட்சிக்குள் உள்ள பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்கு நீதிமன்றத்தை நாடுவது சரியானதா?

**வியுக்தியார்:** என்ன செய்வது? கட்சிக்குள் நீதியை நிலைநாட்ட முடியாது என்ற நம்பிக்கையில்தானே நீதிமன்றத்தை நாடுகின்றார்கள். நேற்றைய ஈழநாடுவில் அப்புக்குட்டியர் சொல்லியிருந்தது போல, நீதிமன்றில் பிணக்கில் இருக்கும் கட்சியை அந்தப் பிணக்குகளுக்கு தீர்வுகாணப்படும்வரை முடக்கிவைக்கவேண்டும் என்று கோரி தேர்தல் ஆணையத்திற்கு எதிராக யாராவது நீதிமன்றம்நாடினால் கட்சிக்கு என்ன நடக்குமோ தெரியவில்லை. தலைவர் பதவிக்கான தேர்தல் நடந்தபோது முடிவு மாறிவந்திருந்தால், இன்று மற்றுமொரு முறை கட்சித் தலைவர் தேர்தலில் தோற்றார் என்ற 'பெருமை" கட்சிக்கு கிடைத்திருக்கும். அந்தக் கட்சியைப் பொறுத்தவரை ~~தலைவர் என்பதெல்லாம் வெறும்~~ பதவி மட்டும்தானோ என்று எண்ணத் தோன்றுகின்றது. ஆனால் இவர்களோ தலைவர் பதவிக்காக தொடர்ந்து நீதிமன்றத்தை நாடி ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

---

**எஸ் பீற்றர்போல்,**
**இரண்டாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி - இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடனான சந்திப்பின்போது கடற்றொழிலாளர்கள் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அதனடிப்படையில் குறித்த மனிதாபிமான அணுகுமுறை என்றால் என்ன என்பது தொடர்பில் ஜனாதிபதியிடம் வினவவுள்ளேன் என்று முன்னாள் கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** அவருக்கு ஏற்பட்ட இந்த சந்தேகம் எனக்கும்தான் ஏற்பட்டது. மனிதாபிமான அணுகுமுறையை கடைப்பிடிப்பது என்றால், நமது கடலில் அத்துமீறி மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை மனிதாபிமானத்துடன் அணுகுவது என்றால், ஒன்று அவர்களை மனிதாபிமான ரீதியில் மீன்பிடிக்க அனுமதிப்பது. அல்லது அப்படி சட்டவிரோதமாக மீன் பிடிப்பவர்களை கைதுசெய்யாமல் விரட்டிவிடுவது. கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம், டக்ளஸ்க்கு ஜனாதிபதி என்ன பதிலைத்தருகிறார் என்று. எனக்கு என்னவோ, முதல் சந்திப்பிலேயே எதற்கு முரண்படுவான் என்று ஜனாதிபதி நினைத்திருப்பார் என்றே தோன்றுகின்றது. பாராளுமன்ற தேர்தலின்போது யாழ்ப்பாணத்தில் நடந்த தனது பிரச்சாரக் கூட்டத்தில் சட்டவிரோத மீன்பிடியை அனுமதிக்கமுடியாது என்று சொன்னதை அவர் மறந்திருக்கமாட்டார் என்றே நினைக்கின்றேன்.

---

**சி. ராஜேஸ்வரன்,**
**கோயில் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** சர்வதேச நாணய நிதியம் பற்றி பாராளுமன்றில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்திய விஜயம் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை என்றும் இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்றும் கூறியுள்ள மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, சிறந்த பொருளாதார சந்தையைக் கொண்டிருக்கின்ற இந்தியாவுடன் எட்கா ஒப்பந்தத்தை செய்வது பாதகமானது அல்ல என தனது தனிப்பட்ட கருத்தை தெரிவித்துள்ளார். ஆனால் அரசியல்வாதிகள் பலர் எட்காவை எதிர்க்கின்றனரே அது எதற்காக?

**வியுக்தியார்:** எதிர்க்கட்சியாக இருந்தபோது இன்றைய ஆளும்கட்சியான தேசிய மக்கள் சக்தியும் தான் அதனை எதிர்த்தது. அவர்கள் ஒருபடி மேலே போய், எந்தக் கட்டத்திலும் அதனை அனுமதிக்கமாட்டோம் என்று சபதம் வேறு செய்திருக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு கூறியதில் நியாயம் இருக்கும் என்பதாலேயே இந்த வியுக்தியாரும் எட்காவை விரும்பவில்லை. இப்போது அவர்கள் அதனை ஆதரிக்க முடிவெடுத்திருக்கிறார்கள் என்றால், அதில் அப்படி என்ன மாற்றத்தை அவர்கள் செய்தார்கள் என்பதைச் சொல்லுவர்கள் தானே. அதுவரை பொறுத்திருந்து பார்த்துவிட்டுத்தான் கருத்துச் சொல்வது சரியாக இருக்கும்.

---

**கே. கணேஷ், பிரதான வீதி, ஹட்டன்.**

கேள்வி: ரணில் - ராஜபக்ஷவின் ஆட்சி நடைபெறுவதாக கடந்த காலத்தில் நாம் விமர்சனங்களை முன்வைத்திருந்தோம். ஆனால், தற்போது ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைகளை அவ்வாறே பின்பற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் அநுர விக்கிரமசிங்க ஆட்சியா நாட்டில் நடைபெறுகிறதென கேள்வியெழுப்புகிறோம் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்திருக்கிறாரே. இது சரியானதா?

**வியுக்தியார்:** ரணில் ராஜபக்ச ஆட்சி என்று அவர்கள் சொன்னபோதும், ராஜபக்சவின் கட்சிக்காரர்களை வைத்தே ரணில் ஆட்சிசெய்தாலும், ரணில் தன்வழியே-தனிவழியிலேயே ஆட்சி செய்தார். ராஜபக்சக்கள் சர்வதேச நாணய நிதியத்தை நிராகரித்து ஆட்சியில் இருந்ததால்தான் நாடு வங்குரோத்து அடைந்தபோது அவர்களுக்கு வழி தெரியவில்லை. ஆனாலும் ரணில் ராஜபக்ச ஆட்சி என்று சொன்னபோது நியாயம் இருந்தது. ஏனெனில் அவரது கட்சிக்காரர்களை வைத்தே அவர் ஆட்சியில் இருந்தார். ஆனால் இன்று அரசாங்கமோ மூன்றில் இரண்டு பலத்துடன்இருக்கும்போது இவர்கள் ஏன் இப்படி சொல்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஐ.எம்.எவ்வை கைவிட்டால் நாடு மீண்டும் வங்குரோத்து அடைந்துவிடும் என்றும் கூறிக்கொண்டு, அவர்களுடன் சேர்ந்து பயணிப்பதால் அனுர விக்கிரமசிங்க ஆட்சி என்கிறார்கள். எதிர்க்கட்சியில் இருந்தால் இப்படி ஏதாவது சொல்லிக்கொண்டிருக்கவேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும்.

---

**போல் சத்திதாசன்,**
**அச்சுவேலி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** இலங்கை தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு, இலங்கை தமிழரசு கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டதே. கவனித்தீர்களா?

**வியுக்தியார்:** கட்சிக்கு 75 வயது வந்துவிட்டது என்பதை நினைவுபடுத்தியிருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சியில் எழுபத்திஐந்து பேராவது கூடியிருந்தால், நிகழ்ச்சி சிறப்பாக இருந்திருக்கும் என்று எண்ணத் தோன்றியது. நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களும் 75 வீதமானவர்கள் பிறந்த பின்னர்தான் கட்சி தொடங்கப்பட்டது என்பதும் கவனிக்கவேண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சிரியாவில் பறிபோகும் குர்திஷ் நிலம்! துருக்கியின் ஆக்கிரமிப்பு எல்லை மீறுகிறதா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



சிரியாவில் வீழ்ச்சியுற்ற அசாத் ஆட்சியின் பின்னர், சிரியாவில் வாழும் குர்திஷ் மக்கள் எதிர்காலத்தில் இழக்க நேரிடுபவை இன்னும் அதிகம் என்பதை காணக் கூடியதாக உள்ளது. அவர்களின் சுயாட்சி முதல் தங்கள் சமூகங்களின் பாதுகாப்பு வரை மிகவும் முக்கியமானவற்றை இழக்கிறார்கள் என தெரிவிக்கப் படுகிறது.

அசாத் ஆட்சியின் பின்னர் முதன்மையான பயனாளிகளாக இஸ்ரேலும் துருக்கியும் என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மத்திய கிழக்கில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வரும் இனமான குர்திஷ் மக்கள் தென்கிழக்கு துருக்கி, வட கிழக்கு சிரியா, வட ஈராக், வடமேற்கு ஈரான், தென்மேற்கு ஆர்மேனியா ஆகிய பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர்.

ஆயினும் தாயகம் இல்லாத மிகப் பெரிய இனக்குழுவான குர்திஷ் மக்கள் துருக்கியிலும், சிரியாவிலும் பிற இடங்களிலும் நீண்டகாலமாக துன்புறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.

ஐந்து நாடுகளில் சிதறி வாழும் குர்திஷ் மக்களின், பேரிடியாக ஐந்து நாடுகளிலுமே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட இனமாக கருதப்படுகின்றனர். இதன் விளைவாக விடுதலை போராட்டத்திற்கும் தள்ளப் பட்டார்கள்.

ஈராக், ஈரான், சிரியா, துருக்கி நாடுகளுக்குள் ஆயிரம் பகைமை போட்டியிருந்தாலும், குர்திஷ்தான் என்கிற ஒரு அரசு உருவாகிவிடக் கூடாது என்பதில் இந்நாடுகள் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கின்றன என்பது உண்மை தான்.

2011 இல் சிரியாவின் உள்நாட்டுப் போர் வெடித்த பிறகு, நவம்பர் 2103 இல் குர்திஷ் படைகள் வடகிழக்கு சிரியாவின் சில பகுதிகளில் சுயாட்சியை அறிவித்தன.

அங்கு அவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். சுமார் 30 மில்லியன் குர்திஷ் மக்கள் வடக்கு ஈராக், மேற்கு ஈரான், வடக்கு சிரியாவில் பரவி உள்ளனர். மேலும் துருக்கியின் மக்கள் தொகையில் சுமார் 18 வீதம் பேர் உள்ளனர்.

**ஐந்து நாடுகளில் சிதறிய குர்திஷ்தான்**

குர்திஷ்தான் தாயகமானது ஈராக், ஈரான், சிரியா, துருக்கி, ஆர்மேனிய நாடுகளுக்குள் ஒவ்வொன்றுடனும் இணைந்தவாறு, அந்தந்த நாடுகளின் எல்லைப் பகுதிகளிலேயே அமைந்திருக்கின்றன. குர்திஷ் மக்கள் வாழும் இந்த மலைப் பகுதிகளை இணைத்து 'குர்திஷ்தான்' எனும் தனிநாடு காண விரும்புகிறார்கள்.

முதலாம் உலகப்போருக்குப் பின்னர் ஓட்டோமான் சாம்ராஜ்யம் வீழ்ந்ததையடுத்து நடைபெற்ற 'வெர்சாய்ஸ்' சமாதான மாநாட்டில் குர்திஷ்தான்




கோரிக்கை முதலில் முன்மொழியப் பட்டது.

இதையடுத்து, முதலாம் உலகப் போரில் வெற்றிபெற்ற மேற்கத்திய கூட்டுப்படையினர் சுவிட்சர்லாந்தில் கூடி, 'செவ்ரெஸ் ஒப்பந்தம்' கொண்டு வந் தனர். 1920ல் கொண்டுவரப்பட்ட அந்த ஒப்பந்தத்தில், ஐந்து நாடுகளிலும் உள்ள பகுதிகளை சேர்க்காமல், துருக்கியில் மட்டும் உள்ள பகுதியில் 'குர்திஷ் தேசம்' ஒன்று உருவாக்கப்படும் என்று குறிப்பி டப்பட்டிருந்தது.

ஆனால், 1923ம் ஆண்டில் அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளுடன் கையெழுத்தான 'லாவ்சன்னே' ஒப்பந்தத்தின் படி நவீன துருக்கியின் எல்லைகள் வரையறுக்கப்பட்ட போது குர்திஷ் தேசம் உருவாக்கப்படவில்லை என்பது வரலாற்றின் மறைக்கப்பட்ட பக்கங்களாகும்.

**அசாத் வீழ்ச்சியின் பின் குர்திஷ் மக்கள்**

சிரியாவுடன் கிட்டத்தட்ட 900 கிலோமீட்டர் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் துருக்கி, அசாத் ஆட்சியின் நீண்டகால எதிர்ப்பாளராகவும், சுன்னி ஜிஹாதி பிரிவுகள் உட்பட ஆயுதக் குழுக் களின் முதன்மை ஆதரவாளராகவும் இருந்து வந்துள்ளது.

2016 முதல், துருக்கி தனது எல்லையில் ஒரு தன்னாட்சி குர்திஷ் பிராந்தியத்தை உருவாக்குவதைத் தடுக்கும் நோக் கத்துடன் குர்திஷ் மக்களைக் குறிவைத்து சிரியாவில் பல இராணுவ



இப்போது சிரியாவில் குர்திஷ் மக்கள் தம் வசமுள்ள சுயாட்சி அதிகார பிரதேசத்தை பாதுகாக்க முயல்கின்றனர். ஆனால் துருக்கியின் ஆக்கிரமிப்பு தொடருமானால், குர்திஷ்தான் மக்களின் நாடு காவு வாங்கப்படும் கனவு தேசமாகவே மாறும். ஈராக், ஈரான், சிரியா, துருக்கி நாடுகளுக்குள் ஆயிரம் பகைமை போட்டியிருந்தாலும், குர்திஷ்தான் என்கிற ஒரு அரசு உருவாகிவிடக் கூடாது என்பதில் இந்நாடுகள் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கின்றன என்பது உண்மைதான்

நடவடிக்கைகளைத் தொடங்கி நடத்தியது.

2019 ஆம் ஆண்டில், சிரியாவுடனான தனது எல்லையில் 30 கிலோமீட்டர் இடையக பாதுகாப்பு வலயத்தை உருவாக்க துருக்கி முயற்சித்து தோல்வியடைந்தது. பல ஆண்டுகளாக, எர்டோகன் அந்த தற்காப்புப் பகுதியை நிறுவுவதற்கான தனது திட்டங்களை பலமுறை முயற்சித்துள்ளார்.

தற்போது அசாத் வெளியேற்றப் பட்ட உடனேயே, அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக சிரிய ஜனநாயகப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதியைக் கைப்பற்ற துருக்கி ஆதரவுப் போராளிகள் நுழைந்தனர். துருக்கிய தாக்குதலுக்கு மத்தியில் சிரியாவின் குர்திஷ் மக்களுக்கு எதிர்காலம் நிச்சயமற்றதாக மாறியுள்ளது.

டிசம்பர் 8 அன்று சிரிய ஜனாதிபதி பஷர் அல் - அசாத் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து சிரியாவில் அதிகார வெற்றிடத்தை நிரப்ப உள்ளூர், பிராந்திய மற்றும் உலகளாவிய சக்திகளில் துருக்கி முதன்மையானது.

வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் மூலம் அமெரிக்காவுடன் இராணுவக் கூட்டணியில் இருந்தாலும், சிரியாவில் துருக்கியின் முக்கிய இலக்கு, குர்திஷ் தலைமையிலான சிரிய ஜனநாயகப் படைகளை அழிப்பதாகும்.

பல ஆண்டுகளாக, சிரியாவின் வடகிழக்கில் இஸ்லாமிய அரசை எதிர்த்துப் போராட அமெரிக்கப் படைகளுடன் சிரிய ஜனநாயகப் படை உழைத்துள்ளது. துருக்கியை தளமாகக் கொண்ட குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி இன் விரிவாக்கமாக சிரிய ஜனநாயக படையின் சண்டைப் படையின் பெரும்பகுதியை உருவாக்கும் மக்கள் பாதுகாப்புப் பிரிவுவை துருக்கி பார்க்கிறது.

குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி பல தசாப்தங்களாக தென்கிழக்கு துருக்கியில் போராடி வருகிறது. அத்துடன் குர்திஷ் இன மக்களுக்கு அதிக சுயாட்சி மற்றும் உரிமைகளைப் பெறுவதற்காக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

**குர்திஷ் மக்களுக்கு அமெரிக்காவின் நிச்சயமற்ற ஆதரவு?**

சிரியாவில் தற்போது புதிய அரசை உருவாக்குவது சிரியர்கள் எடுக்க வேண்டிய முடிவுகள் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஆண்டனி பிளிங்கன் கூறியுள்ளார்.

சிரியாவில் போர் நிலமைகள் மாறக் கூடிய நிலையில் இருப்பதால், குர்திஷ் படைகள் ஐ.எஸ்.க்கு எதிராக தொடர்ந்து போரிட அனுமதிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை துருக்கியுடன் விவாதித்ததாக பிளிங்கன் கூறினார்.

ஆனால் துருக்கி ஒரு பரந்த தாக்குதலுக்குத் தயாராகும் நிலையில், குர்திஷ் மக்களுக்கு அமெரிக்க ஆதரவின் எதிர்காலம் தெளிவாகத் தெரியவில்லை.

ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்ட டொனால்ட் டிரம்ப் தனது முதல் பதவிக் காலத்தில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு குர்திஷ் மக்களுக்கு ஆதரவளிக்கும் அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெற்றார்.

வடக்கு ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக, ஈராக்கிய குர்திஷ்களான பெஷ்மெர்கா வீரர்கள் முன்னணியில் போரிட்டனர். 2013 ஆம் ஆண்டின் மத்தியில், தனது கட்டுப்பாட்டில் வடக்கு சிரியாவில் இருந்த எல்லைக்குள் மூன்று குர்திஷ் வாழ்பகுதிகளை ஐ.எஸ். ஜிகாதி குழு வினர் குறி வைத்தனர்.

ஜூன் 2014ல் வடக்கு ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் முன்னேறியதும், அந்த நாட்டு குர்து மக்களைச் சர்ச்சைக்குள் இழுப்பதாக இருந்தது. ஈராக்கிய ராணுவத்தால் கைவிடப்பட்ட பகுதிகளுக்கு, தன்னாட்சி பெற்ற ஈராக்கில் குர்திஷ்தான் பிராந்தியத்தின் அரசாங்கம் தனது பெஷ்மெர்கா படைகளை அனுப்பி, ஐ.எஸ். தீவிரவாதிகளை விரட்டி அடித்தது.

நீண்ட காலமாக தனி நாட்டிற்கான போராட்டங்களால் குர்திஷ் மக்கள் பல அடக்கு முறைக்கு உள்ளானார்கள். குர்திஷ் மக்க்களின் எழுச்சிகளை கட்டுப் படுத்த நினைத்த ஈராக்கின் அதிபர் சதாம் உசேன் ஈவு இரக்கமின்றி அம்மக்களை கொன்று குவித்தார்.

1988-ல் குர்திஷ் இன மக்கள் மீது நரம்புகளை செயலிழக்க வைத்துக் கொல்லும் அதிபயங்கர ரசாயன ஆயுதங்களையும் ஏவினார்.

சதாமின் எதிரியான ஈரானிலும் குர்திஷ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். துருக்கி அரசாலும் குர்திஷ் மக்கள் கொலை செய்யப்பட்டு வருகிறார்கள். சிரியாவும் குர்திஷ் மக்களை ஒடுக்கிக் கொண்டே வருகிறது.

இப்போது சிரியாவில் குர்திஷ் மக்கள் தம் வசமுள்ள சுயாட்சி அதிகார பிரதேசத்தை பாதுகாக்க முயல்கின்றனர். ஆனால் துருக்கியின் ஆக்கிரமிப்பு தொடருமானால், குர்திஷ்தான் மக்களின் நாடு காவு வாங்கப்படும் கனவு தேசமாகவே மாறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் வெட்டுக்காயத்துடன் மருத்துவமனையில் அனுமதி!

## கடற்கொள்ளையர்கள் தாக்கினர் எனத் தகவல்

சென்னை, டிசெ.22

இந்தியாவின் நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த கோடியக்கரையில் இருந்து அக்கரை பேட்டையை சேர்ந்த 3 மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர்.

கோடியக்கரைக்கு தென்கிழக்கே நேற்று அதிகாலை இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு 2 படகில் வந்த 6 கடற்கொள்ளையர்கள் இவர்களது படகை வழி மறித்து மீனவர்களை கத்தி மற்றும் கட்டையால் தாக்கி விட்டு படகில் இருந்த மீன்கள், மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை பறித்துக் கொண்டு தப்பிச் சென்று விட்டனர்.

தாக்குதலில் இருந்து தப்பிய 3 மீனவர்களும் உடனடியாக அவசரம் அவசரமாக கோடியக்கரை கடற்கரைக்கு வந்து சேர்ந்தனர். அங்கிருந்து சக மீனவர்கள் மீட்டு வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

இதில் ராஜேந்திரன் என்பவருக்கு தலையில் வெட்டு காயம் ஏற்பட்டுள்ளது. ராஜ்குமார் என்பவருக்கு தலை மற்றும் கையில் காயம் ஏற்பட்டுள்ளது. நாகலிங்கம் என்பவருக்கும் உள் காயத்துடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த 3 மீனவர்களும் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழக மீனவர்களை தாக்கிய கடற்கொள்ளையர்கள் மீன்பிடி வலை, ஜி. பி. எஸ். கருவி, தொலைபேசி மற்றும் மீன்பிடி உபகரணங்கள் உட்பட 3 இலட்சம் பெறுமதியான பொருட்களை பறித்து சென்றுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் மீனவ மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# தடைசெய்யப்பட்ட தொழில்களில் ஈடுபடும் மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை

## வடக்கு மீனவ சமூகப் பிரதிநிதிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ.22

தடைசெய்யப்பட்ட தொழில்முறைகளை முன்னெடுக்கும் மீனவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஆளுநர் வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில் பல்வேறு கருத்துகள் மீனவ சமூகப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டன. இதனால் ஏற்படும் கடல்வளப் பாதிப்பு மற்றும் ஏனைய தொழிலை முன்னெடுக்கும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களும் சுட்டிக்காட்டப்பட்டன. இதேவேளை, இதுவரை வழங்கப்பட்ட அனுமதிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைகளை மீளாய்வு செய்வது மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பரிந்துரையும் இங்கு முன்வைக்கப்பட்டது.

மேலும், வடக்கு மாகாணத்தின் சில பிரதேசங்களில் பாதுகாப்புத் தரப்பினர் பாஸ் நடைமுறைகளை பின்பற்றுவது தொடர்பிலும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். மீனவர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் ஏற்படும் இழப்புகள் மற்றும் அவற்றுக்கு இழப்பீடுகள் வழங்கப்படாமை தொடர்பிலும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். சட்டத்தால் தடைசெய்யப்பட்ட தொழில்முறைகளை முன்னெடுக்கும் மீனவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதில்லை எனவும் இதனால் கடல்வளம் அழிந்து செல்வதாகவும் மீனவ சமூகப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

மயிலிட்டித்துறைமுகத்தில் 137 இந்தியப் படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் அந்தத் துறைமுகத்தைப் பயன்படுத்துவதில் உள்ள நெருக்கடி தொடர்பில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. (எ)

# அநுரகுமாரவிடம் 13ஆவது...

(07ஆம் பக்கம் பார்க்க)

முக்கியமான பத்திரிகைகளையும் அரசியல் அவதானிகளையும் போன்று இந்த வித்தியாசத்தை அல்லது விலகலை இலங்கை தமிழ் அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் கவனித்து அக்கறை காட்டியதாக தெரியவில்லை.

'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை திசாநாயக்கவின் இந்திய விஜயம் குறித்து வெள்ளிக்கிழமை எழுதிய ஆசிரிய தலையங்கத்தில் 13 வது திருத்தத்தை திசாநாயக்க விரும்பவில்லை என்பதால் மோடி தமிழர் பிரச்னையில் இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் ஒரு மென்மையான போக்கை கடைப்பிடிப்பதில் நாட்டம் காட்டுகிறார் என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்து ஆங்கிலப் பத்திரிகையும் 13 வது திருத்தம் பற்றி மோடி குறிப்பிடத் தவறியதை சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஆனால், இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அதை ஒரு பிரச்னையாக பார்க்கவில்லை.13 வது திருத்தமும் ஓர் அங்கமாக இருக்கும் அரசியலமைப்பையே முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் கூறியிருக்கிறார் என்றும் அதை தாங்கள் வரவேற்பதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த தடவை 13 வது திருத்தத்தைப் பற்றி மோடி குறிப்பிடாமல் இருந்ததன் சூட்சுமத்தை சுமந்திரன் ஏன் மெத்தனமாக நோக்குகிறார் என்று விளங்கவில்லை.

ஜனாதிபதி திசாநாயக்கவுக்கு உள்நாட்டில் அசௌகரியத்தை ஏற்படுத்தக்கூடியதாக தமிழர் பிரச்னை தொடர்பில் எந்த கருத்தையும் கூறக்கூடாது என்பதில் மோடி மிகவும் ஜாக்கிரதையாகவே நடந்து கொண்டிருக்கிறார் என்றே தெரிகிறது. பெருமளவுக்கு மாறிவிட்ட அரசியல் சூழ்நிலைகளில் இந்தியா காலப்போக்கில் 13 வது திருத்தம் பற்றி பேசுவதை கைவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகள் ஒரு கற்பனாவாத அரசியல் உலகில் சஞ்சரித்துக் கொண்டு அந்த திருத்தத்தை பற்றி அக்கறை காட்டுவதில்லை. சிங்களவர்களும் தமிழர்களும் விரும்பாத ஒரு விடயத்தைப் பற்றி இந்தியா ஏன் வில்லங்கத்துக்கு அக்கறைப்படப் போகிறது?

இத்தகைய ஒரு பின்புலத்தில், இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்துக்கு பிறகு கடந்த வெள்ளிக்கிழமை இந்து பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் மீரா சிறினிவாசன் எழுதிய "இலங்கை தமிழர் பிரச்சினையில் யதார்த்த நிலைவரத்தை தெரிந்து கொள்தல்" என்ற தலைப்பிலான கட்டுரையில் சில பகுதிகளை இங்கு கவனத்துக்கு கொண்டுவருவது தமிழ் அரசியல் வாதிகளுக்கு இல்லாவிட்டாலும் தமிழ் மக்களுக்கு பயனுடையதாக இருக்கும்.

"இலங்கை அரசியல் சமுதாயம் பெரியதொரு சவாலை எதிர்நோக்குகிறது. அண்மைய பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு மாவட்டத்தை தவிர ஏனையவற்றில் பிராந்திய தமிழ் கட்சிகளை தேசிய மக்கள் சக்தி தோற்கடித்திருக்கிறது. தமிழ் வாக்காளர்கள் தெளிவான செய்தி ஒன்றைக் கூறிய பிறகு தமிழ் அரசியல் சமுதாயம் அதன் குரலை மீண்டும் பெறுவதற்கு பெரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.

"தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக சர்வதேச சமூகத்தை எதிர்பார்த்து பழக்கப்பட்டுவிட்ட பிறகு தமிழ் அரசியல் தலைமைத்துவம் அதன் சொந்த தோல்வியுடன் மல்லுக்கட்ட நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறது. புதுடில்லியை பொறுத்தவரை இலங்கை தமிழர் பிரச்சினை இந்தியாவிற்குள் நெருக்குதலை தரக்கூடிய ஒன்றாகவோ அல்லது இராஜதந்திர ரீதியில் செல்வாக்கைச் செலுத்த உதவக்கூடிய ஒன்றாகவோ இனிமேலும் இல்லை. பிரச்சினை தீர்வுக்கு இந்தியாவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இந்த உண்மையை விளங்கிக்கொள்வது நல்லது.

"தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் அக்கறையும் செல்வாக்கும் தேய்ந்து கொண்டுபோகிறது என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டிய நேரம் இது. தவிரவும், சிறுபான்மைச் சமூகங்களை நன்றாக நடத்துமாறு இன்னொரு நாட்டைக் கேட்பதற்கான தார்மீகத் தகுதி இந்தியாவுக்கு இருக்கிறதா என்ற கேள்வியையும் அவர்கள் கேட்டுப் பார்க்க வேண்டும்.

"மேற்குலக நாடுகளின் ஆதிக்கத்திலான ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கள், இந்தியா மற்றும் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் ஆகியவற்றுடன் ஊடாட்டங்களைச் செய்யும் தமிழ் அரசியல் சமுதாயத்தின் மையத் தந்திரோபாயம் களத்தில் கணிசமான முன்னேற்றத்தை கொண்டு வரவில்லை என்பது தெளிவானது. தமிழ் அரசியல் சமுதாயம் நம்பகத்தன்மையை மீளக்கட்டியெழுப்பி பொருத்தமான ஒரு சக்தியாக நிலைத்திருக்க வேண்டுமானால் அதற்கு தெரிவுகள் குறைவாகவே இருக்கின்றன.

"அவர்கள் தங்களை திருத்தியமைத்துக் கொண்டு, தாங்கள் பிரதிநிதித்து வப்படுத்த விரும்புகின்ற மக்களை மையப்படுத்திய அரசியலைச் செய்ய வேண்டும். வேறு எங்காவது இருக்கின்ற சக்திகளுடன் வருடக்கணக்காக பேசுவதில் மூழ்கியிருக்கும் தலைவர்கள் இப்போது தமிழ் மக்கள் கூறுவதை உற்றுக் கேட்கவேண்டும். இந்த அவர்களுக்கு அந்த மக்கள் நிலைவரத்தை...

# போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது!

மதவாச்சி, டிசெ.22

20 போதை மாத்திரைகளை தன்வசம் வைத்திருந்த 19 வயது இளைஞன் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

மதவாச்சி பொலிஸ் பிரிவின் இசின் பெஸ்லகல பகுதியில் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பின் போதே இந்த இளைஞன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் இருந்து 20 இற்கும் அதிகமான போதை மாத்திரைகளை விசேட அதிரடிப் படையின் செட்டிக்குளம் முகாம் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் மதவாச்சி பகுதியை சேர்ந்தவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞன் மேலதிக விசாரணைகளுக்காக மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

# நம்பிக்கை ஏற்படுத்தும்....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

கச்சத்தீவுப் பகுதியிலும், பாக் ஜல சந்தியிலும்தான் அதிக அளவில் மீன்கள் கிடைக்கின்றன என்னும் நிலையில் இருநாட்டு மீனவர்களுக்கு இடையேயும் முறையான புரிதல் - நட்புறவை ஏற்படுத்துவதும், இருதரப்பினரும் மீன் வளத்துக்கு பாதகம் இல்லாமல் தங்களது வாழ்வாதாரத்தை அமைத்துக் கொள்ள வழிகோலுவதும் இந்திய - இலங்கை அரசுகளின் கடமை. கடந்த அக்டோபர் மாதம் இலங்கைத் தலைநகர் கொழும்பில் மீனவர் நலனுக்காக நடைபெற்ற இரு நாட்டு கூட்டு பணிக் குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை முறையாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும்.

எந்தச் சூழலிலும் மீனவர்கள் மீது ஆயுத பிரயோகம் செய்வதைத் தவிர்ப்பது, இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை அரசமைப்புச் சட்டத்தின் மூலம் முழுமைப்படுத்துவது ஆகியவை இந்தியாவால் இலங்கை அதிபர் அநுரகுமார திசாநாயகவிடம் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. அவரது முதலாவது அரசுமுறைப் பயணத்தின் வெற்றி, மேலே குறிப்பிட்ட இரண்டையும் நடைமுறைப்படுத்துவதில்தான் உறுதிப்படும்.

(தினமணி ஆசிரிய தலையங்கம்)

# ஊழலுக்கு எதிரான...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூலமாக அதிகாரத்தில் இருந்து விரட்டிய 'அறகலய' போராட்ட இயக்கத்தின் கோரிக்கைகளாகவும் இருந்தன. பொருளாதாரத்தின் முற்றுமுழுதான வீழ்ச்சியே அந்த போராட்டத்தை மூளவைத்தது. அந்த பொருளாதாரத்தை மீட்டெடுப்பதாகவே தேசிய மக்கள் சக்தி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்தது. ஆனால், அதை குறுகிய காலப்பகுதிக்குள் செய்வது கஷ்டமானது என்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனால், ஏனைய பிரதான அரசியல் கட்சிகள் மீதான முற்றுமுழுதான வெறுப்பின் காரணமாக பொறுமையாக இருந்து பொருளாதாத்தை மீண்டும் சரியான தடத்துக்கு கொண்டு வருவதற்கு போதுமான கால அவகாசத்தை வழங்குவதற்கு மக்கள் தயாராக இருப்பது அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதிர்ஷ்டவசமான ஒரு சூழ்நிலையாகும். கடந்த காலத்து பாவங்களுக்கு அரசாங்கத்தை பொறுப்பாக்க முடியாது என்பதையும் நிலைவரத்தை மாற்றியமைப்பதற்கு அரசாங்கத்துக்கு கூடுதலான கால அவகாசம் தேவை என்பதையும் பெரும்பாலான மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

அரசாங்கம் அதன் ஊழல் எதிர்ப்பு மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டு ஆணையை உறுதியாகப் பின்பற்றுவதன் மூலமாக அதன் நம்பகத்தன்மையை தொடர்ந்து பேணிப் பாதுகாக்கின்றது. உண்மையானவை என்று நிரூபிக்க முடியாத பல்கலைக்கழக கல்வித் தகைமைகள் பற்றிய பிரச்சினை பொறுப்புக்கூறல் விவகாரத்திற்குள் வந்திருக்கிறது. தாங்கள் பெற்றதாக கூறும் பல்கலைக்கழக பட்டங்களை நிரூபிக்க வேண்டும் என்று அரசாங்கம் அதன் உறுப்பினர்களை கேட்கும் என்பதை அண்மைய நிகழ்வுகளின் மூலம் காணக்கூடியதாக இருக்கிறது. அரசாங்கத்தில் மூன்றாவது உயர்நிலையில் இருக்கும் பாராளுமன்ற சபாநாயகரின் பதவி விலகல் இந்த பொறுப்புக்கூறல் கடப்பாட்டின் ஒரு தெளிவான அறிகுறியாகும். தனக்கு இருப்பதாக உரிமை கோரிய கல்வித் தகைமையை நிரூபிக்க இயலாத நிலையில் அவர் பதவி விலகுவதை தவிர வேறு வழி இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமஷ்டி...

ஊடக சந்திப்பொன்றின்போது இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தற்போது இனவாதத்தை பரப்பி வருகின்றார். அவர் கொழும்பில்தான் வாழ்கின்றார். கொழும்பு மக்கள் அவருக்கு துளியளவும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. நிலைமை இவ்வாறு இருக்கையில் வடக்குக்கு சென்று மக்கள் ஏன் தவறாக வழிநடத்தவேண்டும்?

அதுமட்டுமல்ல இந்திய பிரதமருக்கு கடிதமொன்றையும் அவர் அனுப்பியுள்ளார். சமஷ்டி முறைமைக்கு அழுத்தம் கொடுக்குமாறு அக்கடிதம் ஊடாக கஜேந்திரகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

கஜேந்திரகுமார் இனவாதத்தை துண்டினால் நாம் சும்மா இருக்கமாட்டோம். பிறகு அவருக்கு எங்கு செல்ல வேண்டி வருமோ தெரியவில்லை. இனவாதத்துக்கு இடமளிக்கக்கூடாது.

டயஸ்போராக்களின் கோரிக்கைக் கேற்பவே கஜேந்திரகுமார் சமஷ்டி கோருகின்றார். டயஸ்போராக்களிடம் பணம் வாங்கினால் பரவாயில்லை, ஆனால் இனவாதத்தை தூண்ட இடமளிக்கமாட்டோம். வடக்கில் உள்ள விகாரைகளை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் - என்றார். (அ)

## அநுரவின்...

முர்முவுடன் இரவு உணவில் பங்கேற்ற ஜனாதிபதி அநுரகுமார அங்கு உரை நிகழ்த்தினார். வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அநுரகுமார இந்தியாவின் முன்னணி வர்த்தக சமூகத்தினரையும் சந்தித்தார்.

இந்தியப் பிரதமர் மிகவும் உணர்ச்சிகரமான பிரச்னையாகக் கருதும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பான தனது நாட்டின் நிலைப்பாட்டை ஜனாதிபதி அநுரகுமார நேரடியாக வெளிப்படுத்தியதும் அவரது இந்திய பயணத்தை வெற்றிகரமான பயணமாக இந்திய ஊடகங்கள் முன்னிலைப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் எல்லைக்குள் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தமது அரசாங்கம் இடமளிக்காது என்று ஜனாதிபதி அநுரகுமார நேரடியாக தெரிவித்துள்ளார்.

அநுரகுமார திஸநாயக்கவின் இந்திய பயணம் ஜே.வி.பியின் அரசியல் மாற்றத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியதாக 'த இந்தியன் எக்ஸ்பிரஸ்' சுட்டிக் காட்டியிருந்தது. "இலங்கையின் தரப்பில் வலுவான இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருந்து புதுடில்லியுடனான இராஜதந்திர உறவுகளுக்கு ஜே.வி.பி. யின் பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளுக்கு புதிய நம்பிக்கையை அளித்துள்ளது.

மீளப் பெற முடியாத அரசியல் முரண்பாடுகள் கூட பயன் மற்றும் ஒத்துழைப்புக்கு ஆதரவாக கைவிடப்படலாம் என்பதை இந்தப் பயணம் காட்டுகிறது. மூன்று தசாப்தங்களுக்கு முன்னர், ஜே.வி.பி. கட்சியின் தலைவர் ஒருவர், இந்தியப் பிரதமருடன் ஒரே அரசியல் தளத்தில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம் என்ற எண்ணம் கூட இருந்தது நம்ப முடியாத சூழ்நிலை.

ஆனால் இன்று ஜனாதிபதி அநுரகுமார இந்தியாவுக்கான பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். ஜே.வி.பி.யின் தலைமையானது, புதுடில்லியுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணுவதற்கு இதுவரை காட்டி வந்த உறுதியான பிம்பத்தில் இருந்து விலகியிருப்பது, இந்தியாவுடனான அக்கட்சியின் உறவு எவ்வளவு வளர்ந்துள்ளது என்பதைக் காட்டுகிறது என்று 'த இந்தியன் எக்ஸ்பிரசில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தேசிய...

சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரவை அமைச்சராக கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சமூக ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சருமான முஹமட் முனீர் முலபர் நியமிக்கப்படவுள்ளதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் அவர் சமூக ஒருங்கிணைப்புத்துறைக்கு அமைச்சராக நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. தற்போதைய அரசாங்கத்தில் இதுவரை முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் எவரும் இருக்கவில்லை. அந்த வெற்றிடத்தை நிரப்புவதே புதிய நியமனத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது-என்றுள்ளது. (அ)

## இறக்குமதி...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதுள்ள பஸ் கட்டணத்தின் அடிப்படையில், இறக்குமதி செய்யப்படும் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவது கடினமாகும்.

எனினும் தற்போதுள்ள பஸ் கட்டணத்தை அதிகரிக்கவேண்டும் என நாம் அரசாங்கத்தைக் கோரவில்லை.

அதற்கு மாறாக இறக்குமதி செய்யப்படவுள்ள பஸ்களுக்கு வரி சலுகைகளை வழங்குமாறு தமது சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்-என்றார். (அ)

## சட்டச்சிக்கலுக்கு...

என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளேன் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும். உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதில் எவ்வித சட்ட சிக்கலும் கிடையாது.

ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச் செய்து மீண்டும் வேட்புமனுக்களை கோருமாறு அரசியல் கட்சிகள் வலியுறுத்துகின்றன.

வேட்புமனுக்களை இரத்துச் செய்வதாயின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும். ஆகவே சட்டத்திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தில் உரிய தீர்மானத்தை எடுத்தால் வெகுவரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தலாம்.

மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் பாராளுமன்றத்தின் ஊடாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தியுள்ளோம்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த காலங்களிலும் பல பரிந்துரைகளை பாராளுமன்ற தெரிவுக் குழுக்களிடம் முன்வைத்துள்ளது.

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் சிறந்த முறையில் நடத்தப்பட்டது. தேர்தல் சட்டத் திட்டங்களை பின்பற்றும் நிலையில் மக்கள் உள்ளார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் குறித்து எதிர்வரும் காலங்களில் அரசியல் கட்சித் தலைவர்களுடனும், செயலாளர்களுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட தீர்மானித்துள்ளோம்.

தேர்தலை நடத்துவதற்கான சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தினதும், அரசியல் தரப்பினரினதும் பொறுப்பாகும்-என்றார். (அ)

## மாவீரர்...

இதில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

மூன்று மாவீரர்களின் தாய்மாரை மாவீரர் நாளன்று பொதுச்சுடர் ஏற்றுவதற்கு அழைத்துவரப்பட்ட பின்னர், அவமதித்து வெளியே அனுப்பிய சம்பவம் தொடர்பாக இதன்போது பேசப்பட்டது.

இனி வரும் காலங்களில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படுதல், மாவீரர் துயிலும் இல்லங்களில் அரசியல் தலையீடின்றி மாவீரர் நினைவேந்தல் அனுஷ்டிப்பது மற்றும் மூன்று மாவீரர்களின் தாய்மாரை அவமதித்தமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இக்கலந்துரையாடல் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து, மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகத்தின் தலைவர் தேவராசா தீபன் ஊடக சந்திப்பொன்றை நடத்தினார்.

இதன்போது அவர், எதிர்வரும் காலத்தில் மாவீரர் நினைவேந்தல்களை தாம் பொறுப்பேற்று செய்வதாகவும் அதற்கேற்றவாறு தாம் நிர்வாகங்களை தெரிவு செய்து இனிவரும் காலங்களில் அரசியல் தலைவர்கள் இன்றி, முன்னாள் போராளிகள் தலைமைதாங்கி மாவீரர் நினைவேந்தலை நடத்தவுள்ளதாகவும் அதற்கு முன்னாயத்த கூட்டமாக இந்த கலந்துரையாடல் நடைபெற்றது எனவும் தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் யாரும் இந்த நிர்வாகத்தை எதிர்த்து செயற்பட்டால், அவற்றுக்கு முகங்கொடுத்து எமது பணிகளை திறம்பட நிறைவேற்றுவோம் எனவும் அவர் கூறினார். (அ)

## பிரதமர்...

இச்சந்திப்பு, கொழும்பில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, தலைமன்னார் பகுதியில், இராணுவம், பொலிஸ் மற்றும் கடற்படையினர் கையகப்படுத்தியுள்ள மக்களின் காணிகள், பொது இடங்கள், ஆலயங்களுக்கு சொந்தமான காணிகளில் இருந்து, அரச படைகள் வெளியேறி, காணிகள், மக்கள் பாவனைக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இலங்கையில் இருந்து இந்தியா செல்லும், ஐயப்ப பக்தர்களுக்கான விமான பயணக்கட்டணம் அதிகரித்துள்ளதாகவும், அதனால், கட்டணத்தை குறைக்கவேண்டும் எனவும் கோரப்பட்டது.

அத்துடன், கடவுச்சீட்டை பெறுவதற்காக, பக்தர்கள், இந்து கலாசார அமைச்சிடம் கையெழுத்து பெற்ற பின்னரே செல்லவேண்டிய நிலை இருப்பதனால், அதனை தளர்த்தவேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குழுவினரால் கோரிக்கை விடப்பட்டது. (அ)

## இந்திய...

பிரதமர் மோடியை சந்தித்தபோது எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் விடயம் மனிதாபிமானத்துடன் அணுகப்படும் என தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது மீனவர்கள் எல்லை தாண்டி இயந்திரக் கோளாறு காரணமாக சென்றதற்கே மியன்மாரில் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு ரூபா 5 இலட்சம் குற்றப்பணமும், கடூழிய சிறையும் விதிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று இலங்கையில் இறைமையுள்ள எமது கடற்பரப்புக்குள் மீன்பிடியில் ஈடுபடும் எவராக இருந்தாலும் அவர்களுக்கும் இவ்வாறான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். எல்லை தாண்டி வந்து இலக்கை கடற்பரப்புக்குள் மீன்பிடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களை கட்டுப்படுத்தாத கடற்படை இந்த நாட்டுக்கு தேவைதானா? - என்றார். (அ)

## விமானத்தில்...

இந்தியாவுக்கான அதிகாரபூர்வ பயணத்தை கடந்த 15ஆம் திகதி தொடங்கிய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, இலங்கைக்கு சொந்தமான சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் புதுடில்லி சென்றடைந்தார்.

ஜனாதிபதிக்கு வணிக வகுப்பு இருக்கை வழங்கப்பட்டது. ஆனால், அவர் பொதுப் பயணிகள் பகுதிக்கு வந்து பயணிகளுடன் உரையாடியமை, வானூர்தியில் இருந்த பயணிகளுக்கு மட்டுமல்ல, வெளிநாட்டினருக்கும் ஓர் அற்புதமான அனுபவமாக இருந்தது.

நாட்டின் ஜனாதிபதி தனது நாட்டு விமானத்தில் தமக்கு நட்பான அல்லது உறவினரான விமானியின் சேவையை பெற்றுக்கொள்வது வழமையாக இருந்தாலும், ஜனாதிபதி தனது பயணத்துக்கு அவ்வாறான கோரிக்கையை முன்வைக்கவில்லை. இதன் காரணமாக அப்போது விமானத்தை எடுத்துச் செல்லவிருந்த கப்டன் உதயங்கவினால் விமானம் எடுக்கப்பட்டது. மேலும், விமானத்தில் ஜனாதிபதி இருப்பதை அறிவிப்பதும், ஒலிபெருக்கி மூலம் வாழ்த்து தெரிவிப்பதும் வழமை. ஆனால், அந்த அறிவிப்பு எதுவும் அவசியமில்லை என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும், விமான பணியாளர்கள் எவரும் மாற்றப்படவில்லை. ஜனாதிபதியின் மகன் கசுன் திஸநாயக்கவும் அன்றைய தினம் கடமையில் இருந்தபோதிலும் அவர் லண்டன் செல்லும் விமானத்தில் அன்றைய தினம் பணிக்குச் சென்றிருந்தார். தேவைப்பட்டால், அவரது சேவையை புதுடில்லிக்கு விமானத்தில் அழைத்திருக்கலாம். ஆனால், ஜனாதிபதி அத்தகைய கோரிக்கையை முன்வைக்கவில்லை. இந்தச் செயல்பாடுகள் அனைத்தும் வேறொரு ஜனாதிபதி வெளிநாட்டுக்கு அதிகாரபூர்வ பயணத்தில் இருக்கும் காலத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாக்குறுதிகளில்...

நாட்டுத் தூதுவர் மே - எலின் ஸ்ரெனரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கான நோர்வே தூதுவர் மே - எலின் ஸ்ரெனருக்கும், இலங்கை தமிழ் அரசு கட்சி உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் புதிய அரசாங்கம் ஆட்சி பீடமேறியிருக்கும் நிலையில், அவர்களால் தமிழ் மக்களின் பிரச்னைகள் எவ்வாறு அணுகப்படுகின்றன? ஏதேனும் முன்னேற்றகரமான நகர்வுகள் இடம் பெற்றிருக்கின்றனவா? என நோர்வே தூதுவர் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்தார்.

அதற்குப் பதிலளித்த பிரதிநிதிகள் ஏற்கனவே வாக்குறுதி அளிக்கப்பட்டதைப் போன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை எனவும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் இன்னமும் முழுமையாக விடுதலை செய்யப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியதுடன், இருப்பினும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என அரசாங்கம் வாக்குறுதி அளித்திருப்பதாகத் தெரிவித்தனர்.

அத்தோடு பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக நீக்குதல், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துதல் என்பன தொடர்பில் ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து தற்போது அரசாங்கம் பின்வாங்குவது போல் தென்படுவதாகவும், அவற்றுக்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதை அரசாங்கம் தாமதப்படுத்துவதாகவும் சுமந்திரன் மற்றும் சாணக்கியன் நோர்வே தூதுவர் மே-எலின் ஸ்ரெனரிடம் எடுத்துரைத்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# உள்ளூராட்சித் தேர்தலில் நாங்கள் மீண்டெழுவோம்!

## நாமல் ராஜபக்ஷ நம்பிக்கை



கொழும்பு, டிசெ. 22

**பொதுத்தேர்தலைவிடவும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியின் வாக்கு வங்கி அதிகரிக்கும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

பொதுஜன பெரமுன கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் கூடியது.

இதன்போது கட்சியின் புதிய தேசிய ஏற்பாட்டாளராக பாராளுமன்ற உறுப்பினர் டி.வீ.சானக நியமிக்கப்பட்டுள்ளார். கிராமிய மட்டத்திலான அரசியல் பணிகளை முன்னெடுப்பதற்குரிய பொறுப்பு முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட நாமல் ராஜபக்ச, மொட்டு கட்சியை பலப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

"ஜனாதிபதி தேர்தல் எமக்கு பெரும் சவாலாக இருந்தது. ஆனால் பொதுத்தேர்தலில் மீண்டெழ முடிந்தது. அதைவிடவும் சிறந்த பெறுபேறு உள்ளாட்சி சபைத் தேர்தலில் கிடைக்கப் பெறும்." - எனவும் நாமல் குறிப்பிட்டார். (அ)

# ஹற்றனில் பஸ் விபத்து மூன்று பேர் உயிரிழப்பு!

### 30இற்கும் மேற்பட்டோர் காயம்

கொழும்பு, டிசெ. 22

ஹற்றன் - மல்லியப்பு பகுதியில் நேற்றுக் காலை பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 3 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹற்றனில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும், இவ் விபத்தில் 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# நாணய நிதிய நிறைவேற்று குழு கூட்டத்தை எதிர்வரும் மாதங்களில் நடத்த எதிர்பார்ப்பு

கொழும்பு, டிசெ. 22

இலங்கைக்கு அடுத்து வழங்கப்பட வேண்டிய கடன் வசதியின் பங்கு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தமது நிறைவேற்று குழுக் கூட்டத்தை எதிர்வரும் மாதங்களில் நடத்த எதிர்பார்த்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

ஊடக சந்திப்பொன்றில் ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே சர்வதேச நாணய நிதிய தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜூலி கொசேக் இதனைக் கூறினார். (அ)

# காலியில் தம்பதி மீது துப்பாக்கி பிரயோகம்

## கணவன் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 22

காலி, தடல்ல பகுதியில் தம்பதியினர் மீது மேற்கொள்ளப்பட்டட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கணவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலி - கொழும்பு பிரதான வீதியில் தடல்ல மயானத்திற்கு அருகில் நேற்று முன் தினம் மாலை தம்பதியினர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர்.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த தம்பதியினர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். படுகாயமடைந்த கணவன் உடனடியாக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 38 வயதான மெலேகொட வஞ்சவலபடபெந்திகே பத்தும் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தின் போது அவருடன் பயணித்த அவரது மனைவியும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அரசாங்கம் இறக்குமதி செய்யும் முதல் அரிசி அடுத்த வாரம் வரும்



கொழும்பு, டிசெ. 22

அரசாங்கம் இறக்குமதி செய்யும் முதல் அரிசித் தொகை, எதிர்வரும் 24 ஆம் திகதி நாட்டுக்கு கொண்டு வரப்படவுள்ளதாக, அரச வர்த்தக கூட்டுத்தாபனத் தலைவர் ரவீந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு, இதுவரை 67 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், அதில், 28 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் பச்சை அரிசியும், 38 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் நாட்டு அரிசியும் இறக்கு மதி செய்யப்பட்டுள்ளதாகவும், இலங்கை சுங்க திணைக் கள பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

இந்த அரிசித் தொகைக்கான இறக்குமதி வரியாக, சுங்க திணைக்களம், 4.3 பில்லியன் ரூபாயை அறிவித்துள்ளது. (அ)

# வாகனங்களின் விலைகள் குறைவடையும் சாத்தியம்



கொழும்பு, டிசெ. 22

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல், தனிப்பட்ட பாவனைக்கானவாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ள நிலையில், நாட்டில் வாகனங்களின் விலை வேகமாகக் குறைவடையும் என ஜப்பான் - இலங்கை வர்த்தக சங்க தலைவர் ஜகத் ராமநாயக்க தெரிவித்தார்.

குறைந்த இயந்திர திறன் கொண்ட வாகனங்களே எமது நாட்டுக்கு மிகவும் பொருத்தமானவை.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் தனிப்பட்ட பாவனைக்கான வாகனங்களை இறக்குமதி செய்ய, அனுமதி வழங்கப்படவுள்ளது. அதனால், வாகனங்களின் விலை வேகமாகக் குறைவடையும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கொரிய தூதுவருடன் சந்திப்பு!



கொழும்பு, டிசெ. 22

கொரிய குடியரசின் இலங்கைக்கான தூதுவர் மியோன் லீக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, இலங்கைக்கும் கொரியாவுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவிவரும் உறவுகளை தொடர்ந்தும் பேணிச் செல்வதற்காக தனது நன்றியை தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மேலும் இந்த உறவுகளை பேணிச் செல்லுமாறு கோரிக்கை விடுத்தார். அத்துடன் கொரிய குடியரசில் வேலைவாய்ப்புக்களுக்கான இலங்கையர்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறும், அந்த வேலைவாய்ப்புக்களுக்கு தேவையான பயிற்சி பெற்ற ஊழியர்களை வழங்குவதற்கு நாடாக உச்சப்பட்சமாக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், அதற்கு எதிர்க்கட்சியிலிருந்தும் தனது பங்களிப்பை வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார். (அ)

# சிவப்பு பச்சை அரிசிக்கு நாடு முழுக்க தட்டுப்பாடு

கொழும்பு, டிசெ. 22

நாடளாவிய ரீதியில் சிவப்பு பச்சையரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேல்மாகாணத்தில் 99 வீதமான கடைகளில் சிவப்பு பச்சை அரிசி விற்பனைக்கு இல்லை என நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

சில தனியார் கடைகளில் நிபந்தனைகளுடன் சிவப்பு பச்சை அரிசி வியாபாரம் நடப்பதாகவும், 500 ரூபாய்க்கு மேல் பொருட்களை வாங்கினால், 2 கிலோ சிவப்பு பச்சை அரிசி, கட்டுப்பாட்டு விலையை விட 20 அல்லது 30 ரூபாய் மேலதிகமாக விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல பல்பொருள் அங்காடிகளில் சிவப்பு அரிசி விற்பனைக்கு இல்லை. எனினும், அந்த கடைகளில் நாட்டு அரிசி மற்றும் கீரி சம்பா அரிசி விற்பனைக்கு காணப்படுவதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சில மொத்த வியாபாரிகள் மொத்த விலையில் அரிசி விற்பனை செய்வதை நிறுத்திவிட்டு, அதிக விலை பெறும் நோக்கில் சில்லறை விலையில் அரிசியை விற்பனை செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ரஷ்யா வழங்கிய உரம் தரமானது!

கொழும்பு, டிசெ. 22

ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட மியூரேட் ஒப் பொட்டாஸ் உரம் தரமானது என விவசாய அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த உரத்தின் நிறம் தொடர்பில் விவசாயிகள் மத்தியில் அச்சம் ஏற்பட்டதையடுத்து, இந்த உரத்தின் தரம் தொடர்பில் ஆராய்ந்த விவசாய அமைச்சின் மண் தொடர்பான விசேட நிபுணர் ரேணுகா சில்வா, அந்த உரம் தரமானது என உறுதிப்படுத்தியுள்ளார். (அ)

# இலத்திரனியல் உபகரணங்களுடன் விமான நிலையத்தில் மூவர் கைது!

கொழும்பு, டிசெ. 22

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 5 கோடி ரூபாய் பெறுமதியான கையடக்க தொலைபேசிகள் உள்ளிட்ட இலத்திரனியல் உபகரணங்களுடன் மூவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்

டுபாயில் இருந்து நாடு திரும்பியபோது கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 309 கையடக்கத் தொலைபேசிகள், 12 மடிக்கணினிகள், 20 இலத்திரனியல் கைக்கடிகாரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைதான சந்தேகநபர்கள் கொழும்பைச் சேர்ந்த 25, 32 மற்றும் 38 வயதுடைய வர்த்தகர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.